இரண்டாவது இதழ் ஆடி - மார்கழி 2020

# கலை வரலாறு

காண்பியக்கலை, காண்பியப் பண்பாடு, மரபுரிமை என்பவற்றுக்கான ஆய்வேடு

இரண்டாவது இதழ் ஆடி - மார்கழி 2020

# கலை வரலாறு

காண்பியக்கலை, காண்பியப் பண்பாடு, மரபுரிமை என்பவற்றுக்கான ஆய்வேடு

கலைவட்டம், நுண்கலைத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கலை வரலாறு: காண்பியக்கலை, காண்பியப் பண்பாடு, மரபுரிமை என்பவற்றுக்கான ஆய்வேடு

இதழாசிரியர்கள்
யோகலிங்கம் நிசாந்தன்
திருமதி. ஸ்ரீபன் கிருபாலினி
கலாநிதி. தாமோதரம்பிள்ளை சனாதனன்

உதவி
பிரிந்தா குலசிங்கம்
திவானி கந்தசாமி

- கட்டுரைத் தொகுதி ஒன்று என்ற வகையில் அனைத்து உரிமைகளும் கலைவட்டத்திற்கும் நுண்கலைத்துறைக்கும் உரியது.
- சகல மூலக் கட்டுரைகளினதும் உரிமை அந்தந்தக் கட்டுரைகளின் மூல ஆசிரியர்களுக்கு உரித்தானதாகும்.
- சகல மொழிபெயர்ப்புகளினதும் உரிமை மொழிபெயர்ப்பாளர்களுக்கு உரியதாகும்.

இரண்டாவது இதழ் ஆடி - மார்கழி 2020

# கலை வரலாறு

காண்பியக்கலை, காண்பியப் பண்பாடு, மரபுரிமை என்பவற்றுக்கான ஆய்வேடு

## உள்ளடக்கம்

அரசியல் முரண்பாட்டுக்குள்ளாகும் திருவள்ளுவர் உருவவியலைக் கட்டவிழ்த்தல்

**பிரிந்தா குலசிங்கம்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பண்பாட்டு நுழைவாயிலும் தமிழ் அடையாளமும்

**ருக்ஷனா வேலாயுதம்**

பறாளைத் தேரினைக் கதைகளின் ஊடாகக் கட்டமைத்தல்

**யோகலிங்கம் நிசாந்தன்**

யாழ்ப்பாண சேமக்காலை சிற்ப வேலைப்பாடுகள்

**யுகேந்திரன் சயந்தன்**

நேர்காணல்: மருதமுனை நெசவாளர்கள்

**பிரவாகினி தர்மலிங்கம்**

கலை வரலாறு: காண்பியக்கலை, காண்பியப் பண்பாடு, மரபுரிமை என்பவற்றுக்கான ஆய்வேடு

இதழாசிரியர்கள்
யோகலிங்கம் நிசாந்தன்
திருமதி. ஸ்ரீபன் கிருபாலினி
கலாநிதி. தாமோதரம்பிள்ளை சனாதனன்

உதவி
பிரிந்தா குலசிங்கம்
திவானி கந்தசாமி


- கட்டுரைத் தொகுதி ஒன்று என்ற வகையில் அனைத்து உரிமைகளும் கலைவட்டத்திற்கும் நுண்கலைத்துறைக்கும் உரியது.
- சகல மூலக் கட்டுரைகளினதும் உரிமை அந்தந்தக் கட்டுரைகளின் மூல ஆசிரியர்களுக்கு உரித்தானதாகும்.
- சகல மொழிபெயர்ப்புகளினதும் உரிமை மொழிபெயர்ப்பாளர்களுக்கு உரியதாகும்.

இரண்டாவது இதழ் ஆடி - மார்கழி 2020

# கலை வரலாறு

காண்பியக்கலை, காண்பியப் பண்பாடு, மரபுரிமை என்பவற்றுக்கான ஆய்வேடு

## உள்ளடக்கம்

அரசியல் முரண்பாட்டுக்குள்ளாகும் திருவள்ளுவர் உருவவியலைக் கட்டவிழ்த்தல்

**பிரிந்தா குலசிங்கம்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பண்பாட்டு நுழைவாயிலும் தமிழ் அடையாளமும்

**ருக்ஷனா வேலாயுதம்**

பறாளைத் தேரினைக் கதைகளின் ஊடாகக் கட்டமைத்தல்

**யோகலிங்கம் நிசாந்தன்**

யாழ்ப்பாண சேமக்காலை சிற்ப வேலைப்பாடுகள்

**யுகேந்திரன் சயந்தன்**

நேர்காணல்: மருதமுனை நெசவாளர்கள்

**பிரவாகினி தர்மலிங்கம்**

# அரசியல் முரண்பாட்டுக்குள்ளாகும் திருவள்ளுவர் உருவவியலைக் கட்டவிழ்த்தல்

பிரிந்தா குலசிங்கம்

'தமிழ்' எனும் அடையாளப்படுத்தப்படும் பரப்பிற்குள் வரும் பண்பாட்டில் திருக்குறள் அற இலக்கிய ரீதியாகப் பெரும் பங்களிப்பைச் செய்யும் நூலாகக் கருதப்பட்டு வருகிறது. அவ்வாறிருக்க சிலைகள், ஓவியங்கள் எனப் பலதரப்பட்ட காண்பிய உற்பத்திகள் திருவள்ளுவர் எனும் பாடுபொருள் மீது உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. பொதுவாக நினைவுச்சின்னமாக வைக்கப்படும் எல்லா உருவங்களுக்குப் பின்னாலும் அவற்றிற்கான அரசியல் இருக்கத்தான் செய்யும். அவற்றில் ஒரு உதாரணமாக திருவள்ளுவர் உருக்களை ஆராய்வதற்காக எடுத்துக் கொள்கிறேன். வள்ளுவர் உருக்களும் அவ்வுருவவியலும் ஆட்சி அரசியல் உட்பட்ட பலதரப்பட்ட புலங்களில் முரண்பாட்டுக்குள்ளாவதானது கலைவரலாற்று நோக்கில் உருவவியல் ரீதியிலான ஆய்விற்குட்படுத்த வேண்டிய தேவையைக் கோருவதாக உள்ளது. திருவள்ளுவர் உருவவியலானது ஆழமான ஆய்வைக் கோரத்தக்கது என்பதுடன் இதன் தோற்றப்புலங்களையும் காரணிகளையும் இன்னும் அதிகமாகக் கண்டறியவேண்டியுள்ளது. முழுமையான ஓர் ஆய்வாக இதை முன்வைக்காது தொடர்ச்சியைக் கோரும், மாறுதல்களுக்கு உட்படும் ஆய்விற்கான ஆரம்பமாகவே முன்வைக்கிறேன். அதன்படி திருவள்ளுவர் உருக்கள் சர்சைக்குள்ளாகும் தமிழகப் பரப்பை பிரதானமாக வாசிப்பிற்குட்படுத்துகிறேன்.

திருவள்ளுவர் உருக்களைக் கட்டவிழ்ப்பதற்கான தேவையை உணர்த்தும் சில அடிப்படையான காரணிகளை இனங்காண்கிறேன். 1.தமிழடையாளச் சூழலில் "குறள்" எனும் பேசு பொருளை இங்கு திருவள்ளுவர் எனும் பேசுநபராகக் காண்கிறோம். உலகத்தரம் வாய்ந்த அறநூலை முன்வைப்பதாக இருந்தால் அதற்கான முக்கியத்துவம் குறளுக்கே சென்றடைய வேண்டும். ஆனால் இங்கே அந்நபருக்கு முக்கியத்துவம் சென்றடைகிறது. (இது வள்ளுவர் உருவிற்கு மட்டுமே நிகழும் ஒன்றல்ல) வள்ளுவர் உருவை அல்லது அற இலக்கியத்தின் குறியீடாக வள்ளுவர் உருவை வாசிப்போமானாலும் கூட அது அற இலக்கியத்தை மட்டுமே பிரதிநிதித்துவம் செய்கிறதா? என்பது கேள்வியாக உள்ளது. 2.புழக்கத்திலே பல்வேறுபட்ட வள்ளுவர் உருவவியலைப் பார்க்கமுடிகிறது. அதனால் எது சரியான வள்ளுவர் உரு, அப்படி ஒன்றுள்ளதா? 3. ஏனைய உருக்கள் மத்தியில் திருவள்ளுவர் எவ்வாறு தமிழடையாள அரசியல் தளங்களில் பரவலாகவே புழக்கத்திற்கும் "பெருமை"க்குமுரிய பேசுநபராக மாறியிருக்கிறார்? 4. ஒப்பீட்டளவில் ஏனைய 'தமிழடையாள' உருக்களைவிட இந்தியாவிலே பல வருடங்களாகவே 'திருவள்ளுவர்' ஏன் சர்ச்சைக்குள்ளாக்கப்பட்டு வருகிறார்?

இவ்வாறான வினவல்களிலிருந்து பதிலிடுதல்களுக்குச் செல்லலாம். அதற்கு முன் வள்ளுவர் மீதான சில சர்ச்சைகளைப் பார்ப்போம்.

**தற்காலத்தில் (1991- 2020) இந்தியாவில் திருவள்ளுவர் மீதான சர்ச்சைகள்- சில சம்பவங்கள்**

1. பங்களூரில் திருவள்ளுவர் சிலை திறப்பதற்கு எதிர்ப்பு(1991இலிருந்து). பின்னர் அங்கே சிலை திறக்கப்பட்டது(2009).[1]

2. தருண் விஜய் தமிழர்களைப் புகழும் பொருட்டு திருவள்ளுவரைப் பெருமைப்படுத்தி விளம்பரம் செய்தார். இவரின் வேண்டுகோளின் படி 2014 இல் மனிதவள அபிவிருத்தி அமைச்சர் ஸ்மிருதி ராணி "திருவள்ளுவரிற்கு பிறந்ததின விழாவைக் கருத்தரங்கு. மாநாடு என்பன மூலம் கொண்டாடவேண்டும்" என்றார். 2015 இல் பா.ஜ.க பாராளுமன்ற உறுப்பினர் தருண் விஜய் திருவள்ளுவர் பற்றி எழுதிய புத்தகம் ஒன்றை ஸ்மிருதி ராணி வெளியிட்டார்.[2]

2. திருவள்ளுவர் ஹரிதுவாரில் வரவேற்புப்பெறாமை சங்கராச்சாரியார் முதலிய வர்ணப் பாகுபாட்டை வேராகக் கொண்ட இந்துமதத்தின் சேவகர்களின் சிலைகளை புனித நதியாகக் கருதும் கங்கை நதிக்கரையோரம் நாட்டியிருக்கும் நிலையில் தாழ்த்தப்பட்ட சாதியாகக் கருதும் வள்ளுவர் சிலையை வைக்கக்கூடாது என கங்கை நதிப்பகுதி மக்கள் போராட்டம் புரிந்து வள்ளுவர் சிலை அகற்றப்பட்டது. பின்னர் ஹரிதுவாரில் அச்சிலை வைக்கப்பட்டது.[3]

4. தமிழ்நாடு பா.ஜ.க தலைவர் திருவள்ளுவர் படத்திற்கு ஒரு காவி நிற ஆடை அணிவித்து சமூக வலைத்தளங்களில் வெளியிடல்.[4]

5. தஞ்சாவூர் மாவட்டத்தின் பிள்ளையார்பட்டி கிராமத்திலுள்ள திருவள்ளுவர் சிலை ஒன்றிற்கு மாட்டுச்சாணி பூசப்பட்டது. அதே சமயம் இந்து மக்கள் கட்சித்தலைவர் அர்ஜுன் சம்பத் அதே திருவள்ளுவரிற்கு காவித்துணி போர்த்தி. உருத்திராட்சை மாலை அணிவித்து விளக்கும் ஏற்றினார். இதைத் தொலைக்காட்சி ஒளிபரப்புகள் நேரலையாகக் காட்டின. அதனால் இவரைக் காவல்துறை தடுப்பில் வைத்திருந்தது.[5]

6. தமிழரைப் பெருமைப்படுத்தும் விளம்பர எண்ணத்தில் பிரதமர் நரேந்திர மோடி திருக்குறள் உட்பட்ட தமிழ் இலக்கியப் பாடல்களை மேடையில் பேசுவதை வழமையாகக் கொண்டிருந்தார். தாய்லாந்து மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட திருக்குறளை தாய்லாந்தில் வெளியிட்டார்.[6]

குறித்த அண்மைய காலங்களில் பா.ஜ.க கட்சியினர் திருக்குறளையும் திருவள்ளுவரையும் பொதுவெளியில் தம் தலையீட்டுடன் கையாளும் போக்கு நிலவும் அதே சமயம் திருவள்ளுவரிற்கு

---

1 Press Trust of India, "Thiruvalluvar's statue unveiled in Bangalore."
2 Times of India, "Tarun Vijay's book on thiruvalluvar by Smiti Irani.
3 Upadhyay, Kavita.,"Thiruvalluvar finds no welcome in Haridwar."
4 TNM staff., "Thiruvalluvar in orange robes: DMK and CPI(M) slam BJP for 'saffronising' legendary poet."
5 Sanjeevee, "Thiruvalluvar Controversy Rages On Between Right, Left In Tamil Nadu."
6 வீரகுமார்,"தாய் மொழியில் திருக்குறள் மொழிபெயர்ப்பை வெளியிட்ட மோடி.. தாய்லாந்தில் கோலாகலம்."

காவி உடை தரித்து இந்து அடையாளத்தை வள்ளுவர் மீது திணிப்பதாக சமூக வலைத்தளங்களில் பலரும் கண்டனம் தெரிவித்திருந்தனர். "முன்னர் பெரியார் இப்போது திருவள்ளுவர் அவமானப்படுத்தப்படுகிறார். யாரெல்லாம் தமிழ் மொழிக்காக மனமுவந்து பாடுபட்டனரோ அவர்களை அவமானப்படுத்துவதற்காகவே இவை தொடர்ச்சியாகச் செய்யப்பட்டு வருகின்றன" என தி.மு.க தலைவர் ஸ்ராலின் பதிவிட்டார்.[7] திருவள்ளுவரை உரிமை கோரலில் சில அண்மைக்கால முரண்பாடுகளை எடுத்துப்பார்த்தால் தொடர்ச்சியான இம் மோதும் சம்பவங்களில் திருவள்ளுவர் அவமானப்படுத்தப்பட்டார், இது தமிழிற்கு வந்த அவமானம் போன்ற கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டு வந்தன இவற்றின் அடிப்படையை முதலில் புரிந்துகொள்ளவேண்டும்.

எப்போதுமே ஒரு வார்த்தையில் வேறு வார்த்தைகளும், ஒரு பிரதியில் வேறு பிரதிகளும் இருக்கும். ஒரு பிரதி ஒரு சுய நிர்ணயமான முழுமையாக இருக்க முடியாது, அது ஒரு மூடிய அமைப்பாக இயங்காது என்பதை "பாடநிலை ஊடாட்டம்" கருதுகிறது. இக் கோட்பாட்டின் பார்வையின்படி இங்கே தற்புதுமை என்பதைப்பார்க்க முடியாது.[8] திருவள்ளுவர் உருவினை ஒரு பிரதியாகக் கருதி அதன் உருவவியற் கூறுகள் எவ்வாறு வெவ்வேறுபட்ட பிரதிகளிலிருந்தும் வருவிக்கப்பட்டுள்ளன என்பதை இனி அவதானிப்பதோடு மட்டுமல்லாது ஸ்டுவர்ட் ஹோல் கூறுவது போல் ஆதிக்கக் கருத்தியலின் கருத்தாக்கமும் அடிபணிந்த கருத்தியலின் கருத்தாக்கமும் பிரதிநிதித்துவத்தின் போதாமையைக்காட்டுவதாக இருக்கும். அத்துடன் வேறுபட்ட கருத்தியற் கருத்தாடல்கள், அவ் உருவாக்கங்களின் உள் விளையாட்டு என்பன எந்த நவீன மேம்பட்ட சமூகத்திலும் இருக்கும்.[9] திருவள்ளுவரின் மாறுபடும் அல்லது நிலையான அர்த்தப்பாட்டினை(fixed meaning), நிலையாக நிறுவி முன்வைக்கும் உருவவியல்களை ஒவ்வொரு கருத்தாடல்களின் உற்பத்தியாகவும் இனங்காணலாம். அதற்கு ஒவ்வொரு கருத்தாடல்களையும் அவதானிப்பது அவசியம்.

கருத்துருக்கள், தொன்மம் அல்லது உருக்கள் என்பவற்றின் உருவாக்கத்தில் மக்கள் தமது யதார்த்த இருப்பு நிலவரங்களை அவர்களது கற்பனையான உறவுகளில் வாழ்வதை "பிரதிநிதித்துவத்தின் அமைப்புகள்" என அல்தூசர் கருதுவதன்படி தொடர்பாடலுக்கான ஒரு கற்பனையான வடிவமாக பிரதிநிதித்துவத்தை விளங்கிக்கொள்ளலாம்.[10] உருக்களுடன் தொன்மங்களும் பல்வேறு கதையாடல்களும் பிரதிநிதித்துவ அமைப்பிற்குள் அடங்கியிருக்கும் என்பதற்கேற்ப இப்பிரதிநிதித்துவத்தின் அமைப்புகளை விளங்கிக்கொள்வதற்கு திருவள்ளுவர் உருவவியல்களைத் தீர்மானிக்கும் பல கருத்தாடல்களைக் கண்டறிய வேண்டும். அவற்றை இனிப்பார்க்கலாம்.

## யார் திருவள்ளுவர்

குறள் சங்கமருவிய காலம் கி.பி 250-450 காலத்திற்குரியது என வகைப்படுத்துகின்றனர்.[11] "குறள்" எனும் பெயருடைய தொகுப்பின் நூலாசிரியரின் சமூக அடையாளம் பல நூற்றாண்டுகளுக்குப்பின் வந்த திருவள்ளுவர் மாலையிலேயே (10ஆம் நூற்றாண்டு?) எழுதப்பட்டிருந்தது. திருவள்ளுவ

7 TNM staff., "Thiruvalluvar in orange robes: DMK and CPI(M) slam BJP for 'saffronising' legendary poet'.'
8 Martinez Alfaro, "Intertexuality: Origins and development of the concept", 268, 270.
9 Hall, "Signification,representation, ideology: Althuser and post structuralist debates", 103.
10 Ibid.
11 சிவத்தம்பி, பண்டைய தமிழ் சமூகத்தில் நாடகம்.

மாலையின் முதலாவது செய்யுளில் திருவள்ளுவர் இந்தப் படைப்பைப் படைத்தார் என முதன் முதலில் குறிப்பிடப்பட்டிருந்தது.[12] காலம் குறிப்பிடப்படாதிருக்கும் திருவள்ளுவமாலை 53 குறுகிய செய்யுட்களைக் கொண்டதாகவும் பல புலவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு அவர்களால் எழுதப்பட்டது போலுள்ளது. ஆனால் அவை அத்தனை புலவர்களால் பாடப்பட்டது என்பது நம்பத் தகுந்தாற்போலில்லை. வள்ளுவரது புராணீக சகோதரியாக சில கதைகளிலே கருதப்படும் ஔவையாரின் பெயரில் "கடுகைத் துழைத்தேழு கடலைப்புகட்டி குறுகத்தறித்த குறள்" (பொருள்- ஏழு கடல் நீரையும் துளையிட்டு பரப்பும் படியான கடுகைப் போன்றது) எனப் பாடல் உள்ளது.[13] திருவள்ளுவ மாலையின் ஆரம்ப செய்யுளில் வள்ளுவரது ஆக்கத்தினை மதுரை சங்கத்தின் புலவர்கள் குறைத்து மதிப்பிட்டதாகவும் பின்னர் சொர்க்கத்திலிருந்து வந்த சமிக்ஞையால் அதை ஏற்றுக்கொண்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.[14]

"ஆரிய மொழியோ தமிழோ மிகச்சிறந்தது எனக்கூறுவது கடினம். சமஸ்கிருதம் வேதத்தைக் கொண்டுள்ளது ஆனால் தமிழ் வள்ளுவரின் திருக்குறளைக் கொண்டுள்ளது." திருவள்ளுவமாலையில் இத்தகைய கருத்தினை முன்வைக்க வேண்டியிருந்திருக்கிறது. இச்செய்யுளை வைத்து றொபேட் கோல்ட்வெல் " வேதங்கள் ஒருபோதும் தமிழில் மொழிபெயர்க்கப்படவில்லை ஏனெனில் இது ஏற்கனவே குறளில் உள்ளதால்" எனக் கூறியுள்ளார்.[15] குறளை ஐரோப்பிய இலக்கியகாரர்களுக்கு முதலில் அறிமுகம் செய்தவர் பெஸ்கி. இவர் 1730 இல் வெளியிட்ட "செந்தமிழ் இலக்கணம்" என்ற நூலில் குறள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். "குறள் உலக மொழிகளில் சிறந்த நூல்களிலெல்லாம் முதன்மைப் படைப்பாக எழுந்து நிற்கிறது" என 1835 இல் றெய்லர் வெளியிட்ட "கீழைத்தேய வரலாற்றுக் கையேடுகள்" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.[16]

1812 இல் குறள் மூலபாடம் முதலாவதாக அச்சிடப்பட்டது. 1840 இல் திருவள்ளுவமாலையும் குறளின் ஆங்கிலப்பதிப்பும் வெளியிடப்பட்டது. வள்ளுவரின் தொன்மமும் இலக்கியச் சிறப்பு மட்டுமே தமிழரின் வள்ளுவர் பிரதி பற்றிய விவாதத்திற்கும் பதிப்பிற்குமான காரணமல்ல. இந்து மதசார்பற்ற உள்ளடக்கம் மற்றும் இந்து மூடநம்பிக்கைகள் மீதான கிறிஸ்தவக் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கும் முயற்சியாக வள்ளுவரைத் தெரிவு செய்துள்ளனர் என கமில் ஸ்வெலேபில் கருதுகிறார். 1835இல் ஒரு மிசனறியினர் இந்துக்களிடம் உள்ளதிலேயே பதிப்பிக்குமளவில் சிறப்பானதாகக் குறளைக் குறிப்பிட்டுள்ளனர்.[17] வள்ளுவர் மீதான விவாதங்களும், பதிப்பும் வள்ளுவரிற்கான உருவம் அமைத்தலும், இவை எல்லாவற்றையும் பரவலாக்கல் என்பனவும் நிகழ்ந்த பின்னணியை இவர் கூறும் கருத்துக்களுடன் பொருத்திப் பார்ப்பது திருவள்ளுவரின் உருவைக் கட்டவிழ்ப்பதில் உதவும்.

ஸ்வலேபில் வள்ளுவர் பற்றிக் கூறுவதைப் பார்க்கலாம். குறளினை எழுதியவர் அனேகமாக கல்வியறிவுடைய சமணராக இருக்கவேண்டும். ஆரம்ப தமிழ் செந்நெறிக்கால எழுத்துகளுடன் பரீட்சயம் இருப்பது போல் சமஸ்கிருத சட்டம், நீதி போதனைப் பிரதிகள் போன்ற சிலவற்றின் அறிமுகம் கொண்ட பன்முக சார்புகளுடையவராக இருந்துள்ளார். இவரது வாழ்க்கை பற்றி

12 Zvelabil, "Companion studies to the history of tamil literature", 454.
13 Thirukkural of Thiruvalluvar "An introduction to Kural & its author."; "Valluvar vaakku."
14 Zvelabil, "Companion studies to the history of tamil literature", 456.
15 Ibid, 455.
16 திருவேணிசங்கமம், க.இரகுபரன், *சைமன் காசிச்செட்டியின் தமிழ் புளுடாக்*, 211.
17 Zvelabil, "Companion studies to the history of tamil literature", 459.

ஆதாரபூர்வமான எந்தத் தகவலும் எம்மிடம் இல்லை. உள்ளக ஆதாரத்தின்படி குறளின் மொழி, குறளிலுள்ள கடன் வாங்கிய விடயங்கள், ஆரம்ப எழுத்துகளின் குறிப்புகள் என்பன பற்றி சமஸ்கிருத ஆய்வுகள் பிரச்சனைக்குட்படுத்துகின்றன. இத்தகைய எல்லா நிலவரத்தின்படி குறள் ஆரம்ப செந்நெறி செய்யுள்களிற்குப் பிற்பட்டது பக்தி காலத்திற்கு முற்பட்டது.[18]

குறள் எழுதியவர் பற்றிய முரண்பாடான கதைகளும் உண்டு. அவற்றில் ஒன்று- ஒரு பறையர் பெண்ணிற்கும் பிராமணர் ஒருவருக்கும் பிறந்த சாதி நீக்கப்பட்டவராகப் பார்க்கப்படுகிறார். அடுத்து சாதியால் நெசவாளர் என்று சிலர் கருத சிலர் விவசாயத்தைப்பற்றிப் புகழ்வதால் அவரை நிச்சயமாக வேளாளர் சாதி என்றும் கூறுகின்றனர். ஒரு புலமையாளர் "வல்லப" என்பதுடன் "வள்ளுவ" இனைத் தொடர்புபடுத்தி அரசரின் அலுவலகர் எனக் கூறுகிறார். எஸ். வையாபுரிப்பிள்ளை வள்ளுவரை ஒரு இராணுவத்தின் இடைநிலை அதிகாரி என்கிறார். இந்தியாவின் எல்லா மதத்தினரும் அனேகமாக திருக்குறளை உரிமை கோருகின்றனர். கிறிஸ்தவரான G.V Pope வள்ளுவரை ஒரு பன்முகத்தாக்கம் கொண்டவராகப் பார்க்கிறார். மயிலாப்பூரிலிருந்து வந்து கிறிஸ்தவ ஆசிரியர்களான Pantaneus of Alexandria என்பவருடன் தொடர்பு கொண்டிருந்திருக்கிறார் என்கிறார். ஆனால் கிறிஸ்தவ அறங்களை விட சமண அறத்தின் பிரதிபலிப்பையே குறளில் பார்க்கலாம். புலால் உண்ணாமை பற்றி 251-260 வரையான குறள்களிலும், கொல்லாமை பற்றி 321-333 வரையான குறள்களிலும் காணலாம். குறளில் கடவுள் பற்றி வரும்போது சமணக்கடவுளையே அதிகம் பிரதிபலிப்பதாயுள்ளது. குறள்3-" மலர்மிசை ஏகினான்", குறள்8- "அறவாழி அந்தணன்"(தர்மச்சக்கரத்தைக் கொண்ட பிராமணன்), எண்குணத்தான்(எட்டு மடங்கு தகுதிகளைக் கொண்டவன்), குறள்9-ஆதிபகவன் (சமண அருகக் கடவுளிற்கு வழங்கப்பட்டுள்ளது) இந்த ஒப்பீட்டுடன் கட்டுப்பெட்டித்தனமான இந்து உரையாசிரியர் பரிமேலழகர் கூட உடன்படுகிறார்.[19]

மேலும் பலமான துறவறச்சுவை வரும் இடங்களும் உண்டு. குறள்4-"வேண்டுதல் வேண்டாமை இலான்..."(ஆசையோ பகைமையோ இல்லாதவன்), குறள்6-"பொறிவாயில் ஐந்தவித்தான்"(ஐம்புலன்களின் கதவுகளையும் அழித்தவன்) மேலும் 251-260, 321-330 வரையான குறள்கள் சமண சூழ்நிலையை விபரிப்பன. ஆனால் குறள் அறம்(தர்மம்), பொருள், காமம் என்பவற்றைப் பேசுகிறது, வீடு(மோட்சம்) பற்றிப் பேசவில்லை. தமிழ்நாட்டின் தீண்டத்தகாத சாதிகளில் பறையர்கள் மத்தியிலுள்ள ஒரு உபசாதியில் சடங்கு செய்பவர்களிற்கான பெயராக "வள்ளுவர்" எனும் பெயர் இருக்கிறது. திருவள்ளுவமாலையில் விளக்கவுரையிலே "தாழ்சாதி"யில் பிறந்தவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. குறளின் நூலாசிரியர் என்பதால் "திருவள்ளுவர்" எனப் பெயர் வந்தது.[20]

திருவள்ளுவர் பற்றிய கதைகளில் ஒன்றை இப்போது பார்க்கலாம். வள்ளுவரின் தாயார் பெயர் ஆதி(பறையர் சாதி), தந்தையின் பெயர் பகவன்(பார்ப்பன சாதி). பிராமணரான பகவன் பாத யாத்திரை சென்று கொண்டிருக்கையில் ஆதியை சந்தித்தார். தாழ்த்தப்பட்ட சாதிப் பெண் இவரை அணுகியதால் ஒரு உலோகக் கம்பியால் அப்பெண்ணின் தலையில் அடிக்க தலை வெட்டுப்பட்டது. பகவன் வாரணாசிக்குச் சென்று அவரது சடங்குகளை முடித்துவிட்டு அதே

18 Zvelabil, "Companion studies to the history of tamil literature", 155.
19 Ibid, 156.
20 Ibid, 157, 455, 457.

பாதையில் வரும் வேளை ஆதி அழகிய பெண்ணாக வளர்ந்திருந்ததாகவும் அவரை யார் என மட்டுக்கட்டாது அப்பெண்ணுடன் காதல் வயப்பட்டு திருமணமும் நிச்சயிக்கப்பட்டு சடங்கு ரீதியில் மாப்பிள்ளை மணப்பெண் மீது எண்ணெய் ஊற்றும் போது காயமாறிய தழும்பைக் கண்டு தன்னால் தாக்கப்பட்ட பெண்ணா எனக் கேட்க அப்பெண் ஆம் எனக்கூற பகவன் அப்பெண்ணை விட்டுச்செல்ல அப்பெண்ணோ பின் தொடர்ந்து இறுதியில் பகவனைக் கண்டுபிடித்து தன்னை மனைவியாக்கும் படி கேட்க அவன் ஒரு நிபந்தனையுடன் ஏற்றுக்கொண்டான். எந்தக் குழந்தையைப் பெற்றாலும் அதைக் கைவிட வேண்டும் என்பதே அந்நிபந்தனை.

அவர்களது பயணத்தில் 4 பெண்களும் 3 ஆண்களுமாக ஏழு குழந்தைகள் பிறந்தன. முதலாவது பெண் ஔவையார் அடுத்து தமிழ்ப் பெண் கடவுளரான மாரியம்மா, பத்திரகாளி, வள்ளியம்மா( முருகனைத் திருமணம் புரிந்தவர்), முதலாவது மகனாக இளங்கோ அடுத்து கபிலர் ஏழாவது வள்ளுவர். கைவிடப்பட்ட வள்ளுவர் வேளாளப் பெண் ஒருவரால் வளர்க்கப்பட்டார். தீண்டத்தகாத பிள்ளை என அறிந்ததால் திருவள்ளுவர் எனப் பெயரிட்டதாகவும் அயலாரால் தாழ்பிறப்பு என அழைக்கப்பட்டதால் பறையர் குடும்பம் ஒன்றால் வள்ளுவர் வளர்க்கப்பட்டதாகவும் ஐந்து வயதில் வேளாளப் பெற்றோரிடம் வந்து அவர்களிற்கு மேற்கொண்டு துன்பம் விளைவிக்க விரும்பவில்லை எனக் கூறிப் பொதிகை மலைக்குச் சென்று அகஸ்தியர் போன்ற முனிவர்களிடம் போதனை பெற்றதாகக் கூறப்படுகிறது. பின்னர் பல அற்புதங்கள் அவருக்கு நிகழ்ந்தது. மர நிழலில் ஒரு நாள் முழுதும் நகராமல் அமர்ந்தார், அரக்கரை அழித்தார், நில உரிமையாளர் ஒருவரின் நிலத்தைக் காப்பாற்றியமையால் வாசுகி எனும் அவரது மகளைத் திருமணம் புரிந்தார். மனைவி வாசுகியை அவளது “கற்பினை” நிரூபிக்க மணலை சமைத்த சோறாக்கும் படி கூற அப்படியே செய்தாள். இவர்கள் இருவரும் மைலாப்பூரிற்கு வந்தனர். அங்கு பல அற்புதங்கள் செய்தனர். இங்கு கைவினைகளும் நெசவும் வள்ளுவர் பயின்றார்.[21]

இவ்வாறான கதைகள் கட்டப்பட்ட கருத்தாடலைக் கண்டறிவதனூடே கதைகளின் அரசியலை ஓரளவு புரிந்துகொள்ளலாம். வள்ளுவர் பிறப்பினை 4 கதைகளாகக் கருதுவது பிரதான காலனிய விவாதமாக இருந்தது: அரைவாசி பிராமணர் அரைவாசி பறையர், பிராமணருமல்ல பறையருமல்ல ஆனால் அரச அலுவலர், பறையர், முழுமையான பிராமணர்.[22] இந் நான்கு வாதங்களும் வள்ளுவரை உரிமை கோரும் முயற்சியைக் காட்டுவதாக உள்ளது. மேற்கூறிய கதையை ஒரு உருவகக் கதையாகக்கூட நோக்கலாம் என நினைக்கிறேன். குறிப்பிட்ட ஒவ்வொரு சாதியினரும் அக்கதைக்குள் வள்ளுவருடன் தொடர்புபடுத்தப்படல் மூலம் வள்ளுவரை உரிமை கோரும் தந்திரம் செயற்படுகிறது. இக்கதையில் வள்ளுவரை பிராமணர்கள் உரிமை கோருவதுடன் ஏனைய சாதியினருக்கும் அடுத்தபடியான சிறு அளவிலான உரிமைக்கான பாத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது. பிராமணர் சாராத ஒருவரால் இத்தகைய சிறப்பு வாய்ந்த நூல் எழுதியிருக்க முடியாது எனும் பிராமணர்களது சிந்தனையின் அடிப்படையில் எழுந்த ஒரு கதையாகவே இக்கதை இருக்க வேண்டும். எந்தப்பிரதியும் ஒருதடவை இலக்கியமாக, சமூகமாக, படைப்பாக்கமாக, கலாசாரமாக இருக்கும் எனக் கிறிஸ்தேவாவும் எந்தப்பிரதியையும் சமூக கலாசார பாடநிலையிலிருந்து பிரித்துப்பார்க்க முடியாது. பிரதி உருவாக்கப்பட்ட பின்னணியிலேயே இது அமைந்திருக்கும் என பக்தினும் கூறுகின்றனர். பிரதியைத் தொகுப்பவர் ஏனைய பிரதிகளின் வாசிப்பினை வைத்தே தொகுக்கிறார் அப்பிரதி வாசிப்பின் படிமுறையிலேயே வாசகர் அல்லது

21 Zvelabil, “Companion studies to the history of tamil literature”, 460 ,461.
22 Ibid, 463.

பார்வையாளர்களுக்குக் கிடைக்கிறது.[23] இது தவிர வள்ளுவர் பற்றி வேறு பல கதைகளும் உண்டு அவற்றை இங்கு விவாதிக்க காலம் போதாது. ஆனால் இந்த உரிமை கோரும் தந்திரங்களை அறிவதுடன் இவ்விடத்தில் மட்டுப்படுத்திக் கொண்டு இத்தந்திரம் எவ்வாறு வள்ளுவரிற்கான காண்பியங்களில் உரிமை கோரலைச் செய்கிறது என்பதைப் பார்க்கலாம்.

## திருவள்ளுவர் பிரபலமாதல்

1871இல் மிசனறியைச் சேர்ந்த சார்லஸ் கோவரின் வள்ளுவர் பற்றிய ஆய்வு வெளிவந்தது. இவரிற்கு முன்னைய ஐரோப்பியர்கள் போலல்லாது கடந்த வரலாற்றை விளங்கிக் கொள்ள புராணீக கட்டுக்கதைகளை எடுத்துக்கொண்டு வள்ளுவரை தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு அறப்போக்கின் ஆதாரமாக முன்வைத்துள்ளார் என கமில் ஸ்வெலேபில் குறிப்பிட்டுள்ளார்.[24] இங்கே இரு விடயங்களைக் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன் 1. வள்ளுவர் பற்றிய கட்டுக்கதைகளின் பின்னாலுள்ள கருத்தியலை அடையாளம் காண்பது 2. சார்லஸ் கோவர் போன்றோரின் ஆய்வுகளும் மிசனறிகளின் திருக்குறள் மீதான நேர்நிலையான கருத்துகளும் அக்காலத்தின் ஏனைய காரணிகளும் திருவள்ளுவரை மேலும் முன்னணியில் வைக்க உதவின என்பதை அறிந்து கொள்வது.

இலங்கையில் வட்டுக்கோட்டை செமினறியால் 1830இல் வெளியிட்ட மூவாண்டறிக்கையில் தமிழ்க்கல்வியின் பொருட்டு நன்னூல் உரைநடைச் சுருக்கம், திருவள்ளுவர் குறள், தத்துவக்கட்டளை, சுதேச கணக்கியல் போன்ற நூல்கள் வட்டுக்கோட்டை செமினறியின் பாடத்திட்டத்தில் சேர்த்துக் கற்பிக்கப்பட்டிருக்கிறது.[25] இது போன்ற காரணிகள் கூட 'திருவள்ளுவர்' எனும் கருத்துரு தமிழ்ப்பரப்பில் முன்னிலைக்கு வர உதவியது. கிறிஸ்தவ மதப்பரப்புதலில் திருக்குறள் ஆய்வு, திருக்குறளை முன்வைத்தல் என்பவற்றினூடாக அதற்கான பயன்கோரலும் உள்ளடங்கியிருக்கும் என்பதையும் அவதானிக்க வேண்டும். இவ்வாறு கிறிஸ்தவ மிசனறியின் வேலைத் திட்டங்களினூடாக திருவள்ளுவர் முன்னிலைப்படுத்தப்பட கமில் ஸ்வெலேபில் கூறுவது போல் ஒரு நூற்றாண்டு கழித்து "தாழ் சாதி" எனக் கருதப்பட்டு வந்த திருவள்ளுவர் மட்றாஸ் பிறசிடென்சியில் மைய நிலைப்படுத்தப்பட்டார். தமிழ்ச் சமூகத்தில் சமத்துவமாகக் கருதாது, முன்னுரிமை வழங்கப்படாது ஒடுக்கப்பட்ட சாதியினரைச் சேர்ந்த ஒருவராகக் கருதப்பட்டு வந்த "திருவள்ளுவர்" அச்சமூகத்தினை அடையாளப்படுத்தத்தக்க முக்கியமான ஒரு வகிபாகத்தை எடுத்துக்கொள்கிறார் என்பது தமிழ் சமூகத்தின் ஒரு வரவேற்கத்தக்க அம்சமாகக் கருதலாம்.

## திருவள்ளுவர் பரவலாக்கமும் பிரபல அடையாளமாக்கலும்

மொழி வழி அடையாளம் கொண்ட இனக்குழுமம் ஒன்று அதன் மொழி வழியான மிகப்பழமையான சீரிய ஆக்கங்கள் எனக் கருதுபவற்றை அடையாளமாக முன்வைப்பதில் ஆச்சரியம் இல்லை. ஆனால் அம்மொழி வழி அடையாள உருவாக்கம் நிகழ்ந்த ஒவ்வொரு சந்தர்ப்பங்களையும் அவதானிக்க வேண்டும். அவை ஒவ்வொன்றும் அதனதன் பலாபலன்களின்படி நகர்பவையாகவே இருக்கும். இதனை மிசனறிகளின் மத அரசியலிலிருந்து சுதேசிகளின் பல தரப்பட்ட அரசியல்கள் வரை அவதானிக்க முடிகிறது. திருவள்ளுவரை தமிழ்ப்பரப்பில் பிரதான விக்கிரகமாகப் பிரபலப்படுத்தியது சுதேசிகளே. அதன்படி அடுத்தகட்ட நகர்வாக திருவள்ளுவரைத்

---

23 Prayer Elmo Raj,"Text/Texts interrogating Julia kristeva's concepts of intertexuality" 77, 78.
24 Zvelabil, "Companion studies to the history of tamil literature", 459.
25 ஜெபநேசன், *இலங்கைத்தமிழர் சிந்தனை வளர்ச்சியில் அமெரிக்க மி'ன்.*

தமிழரின் ஆளுமையாக இலக்கிய ஆர்வலர்கள், எழுத்தாளர்கள், கல்வியாளர்கள் உட்பட்ட பலரும் முன்வைத்தனர். தமிழடையாளத்தில் பிரதான வகிபாகத்தை வள்ளுவர் எடுத்துக்கொள்கிறார் என்பது “திராவிடக் கருத்தியல்களை” முன்வைக்கும் பெரும்பான்மையினரின் வேலைத்திட்டத்தின் ஊடாகவே சாத்தியமாகியது.

“யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல், வள்ளுவர் போல், இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணமே பிறந்ததில்லை” (1919) “வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு” எனப் பாரதியாரும் “வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே” எனப் பாரதிதாசனும் புகழ்ந்துள்ளனர். எட்டுத்திக்கெங்கும் சென்று எடுத்துவரும் கலைச் செல்வங்களைத் தமிழிற்குள் சேர்ப்பிக்க வேண்டும் எனக் கூறும் முதற்றமிழ் நவீன கவிஞர் பாரதியார் இடைக்கால ஆங்கில இலக்கியங்களுடன் ஒப்பிட்டு வள்ளுவர் சிறப்பிற்குரியவர் எனக் கருதுகிறார்.[26] பிற்பட்ட காலத்தில் திராவிடவாதியாக செயற்பட்ட பாரதிதாசன் பாரதியைப் போன்றே வள்ளுவரை உலகிற்குப் பொதுவானவராக உயற்றிப்பாடினார். இவர்களது வள்ளுவர் மீதான புகழாரங்கள் அடுத்துவந்த தமிழ் எழுத்தாளர்களாலும் செயற்பாட்டாளர்களாலும் மேலும் மேம்படுத்தப்பட்டன.

மிகச்சுருக்கமாகக் கூறவேண்டுமாயின் அன்றைய இந்தியாவின் சமஸ்கிருத மேலாண்மை பார்ப்பன மேலாண்மை தமிழ் வழி அரசியல் உருவாகுவதற்கான சூழலை உருவாக்கிவிட்டிருந்தது. குறித்த மேலாண்மையின் செயற்பாடுகள் மொழி, ஆட்சி, சலுகைகள் ரீதியில் இப்பகுதி வாழ் மக்களைப் பாதிக்கச் செய்தது. அன்றைய மெட்ராஸ் பிரசிடென்சியில் “திராவிட” மொழி பேசும் மக்களை காலனிய, மிசனறிப் பின்னணியில் திராவிட மொழி ஆய்வுகளும் அதன் வழியாக தமிழை முன்னிலைப்படுத்தல் என்பனவும் நிகழ்த்தப்படுகையில் உள்ளூரவரைப் பிளவுபடுத்தும் நோக்கில் இவை நிகழ்த்தப்பட்டதாகவும் ஒரு வாதம் உண்டு. எது எவ்வாறோ சமத்துவமற்ற சுதேசிகளின் சாதி, சமய, சடங்கு மற்றும் ஏனைய முன்னுரிமைகளால் இத்தமிழ் வழி அரசியல் முனைப்புப் பெற்றது. தமிழ் வழி அரசியலிற்கு முன் அவை திராவிட வழி அரசியலாகவே மிகப் பெரும்பான்மையாகப் பரிணமித்தது. மொழி வழி மாநிலங்கள் பிரிவதற்கு முன்னர் மெட்றாஸ் பிறசிடென்சியில் “திராவிட” எனும் அடையுடன் கட்சி அரசியல் ஆரம்பமாகின. திராவிட மொழி பேசுவோரை ஒன்றிணைப்பதற்கு இவ் அடையைப் பயன்படுத்தினாலும் தமிழ் மொழியே எல்லா வகையிலும் முன்னிறுத்தப்பட்டது. இவ் வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாக திருவள்ளுவரை தமிழடையாளமாக முன்னிறுத்துவதன்பால் கவனத்தைச் செலுத்த விரும்புகிறேன்.

1905வரை திருவள்ளுவரை மகாகவியாகக் கொள்ளத் தயக்கம் காட்டிய பாரதியார் 1916 இல் “தமிழ்நாட்டில் இப்போது புதிய உயிர் தோன்றியிருப்பதால் கம்பன், இளங்கோ, திருவள்ளுவர் முதலிய மகாகவிகளுக்கு ஞாபகச்சிலைகளும், வருசோற்சவங்களும் ஏற்பாடு செய்யவேண்டும்” எனக்கூறினார்.[27] காலனிய காலத்தின் தேசியவாத எழுச்சிப் பின்புலத்தில் ஆளுமைகளுக்கு மெய்யுரு வைக்கும் கலாசாரத்தை தமிழ் தேசிய அரசியலில் பாரதியார் முன்மொழிந்தமையானது பின்வந்த இலக்கியம் சார் எழுத்தாளர்களையோ அல்லது பாத்திரங்களையோ சிலை வழி ஆராதிப்பதற்கான போக்கினை வழியேற்படுத்திக் கொடுத்த காரணிகளில் ஒன்றாக இருக்கும் என நினைக்கிறேன்.

26 மணிகண்டன், “வள்ளுவர் மகானா மகாகவியா பாரதியின் மதிப்பீடு”
27 மேலது.

திருக்குறளிலுள்ள சமூக நீதியற்ற கருத்துக்களைக் கொண்ட பகுதிகளைச் சுட்டிக்காட்டிய பெரியார் "சுயமரியாதை இயக்கத்தினர் இலக்கியங்களை அழிக்கிறார்கள்" என்ற பிரசாரத்தை முறியடிப்பதற்காகவும், இந்து மத புராணங்களை விட திருக்குறள் சிறந்தது எனும் அடிப்படையிலும் மாணவர்கள் திருக்குறளை முழுமையாகப் படிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும், ஆட்சி மன்றங்கள் முதல் கல்வி மன்றங்கள் வரை உயர் பொறுப்பில் இருப்பவர்கள் திருக்குறளில் புலமை பெற்றவர்களாக இருக்க வேண்டும், திருவள்ளுவர் நாள் என்ற ஒன்றைத் தேர்வுசெய்து அறிவித்து, அன்றைய நாள் முழுதும் திருக்குறளையும் வள்ளுவரையும் பரப்பவேண்டும், திருக்குறள் விழா உள்ளிட்ட செய்திகள் வானொலி வழியாக அனைத்து மக்களுக்கும் விளம்பரப்படுத்தப்பட வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் பெரியார் நடாத்திய திருக்குறள் மாநாடுகளில் நிறைவேற்றப்பட்டன.[28]இதிலிருந்து இந்து ஆதிக்கத்திற்கு எதிரான விசையாக பெரியாரின் குறள் மாநாட்டுத் தீர்மானங்களை விளங்கிக்கொள்ளலாம்.

திராவிடக் கழகத்திலிருந்து நீங்கி திராவிட முன்னேற்றக் கட்சியை ஆரம்பித்த சி.என் அண்ணாதுரை தமிழ் மையக்கருத்தியலைக் கொண்டவர், தமிழ்ப் பற்றாளராகத் தன்னை வெளிப்படுத்தியவர். திருக்குறள், சங்கப் பாடல்கள் மற்றும் சிலப்பதிகாரம் என்பன பற்றி மேடைகளில் பேசும் சி.என் அண்ணாதுரை வள்ளுவர் பற்றிக் கூறுகையில்: தமிழகத்திற்கு மட்டுமல்லாமல் வையகம் முழுமைக்கும் வாழ்க்கைக்குரிய நெறியைத் தந்திருக்கிறார். உலகத்தின் பொதுச்சொத்து என எண்ணத்தக்க விதத்தில் பொதுக்கருத்தைப் பரப்பவேண்டும் என்றதுடன் 1968இல் உலகத் தமிழாராட்சி மாநாட்டிலே தமிழறிந்த அறிஞர்களிடம் திருக்குறளைக் கொண்டு சேர்க்கவேண்டும் என்றார். திருக்குறள் உட்பட தமிழ் இலக்கியக் கருப்பொருட்களை வைத்து ஓவியங்கள், பாடல்கள், வரிவடிவம், கூத்து என்பவற்றைப் படைக்கும்படி கூறினார். 1967.6.6 திருவள்ளுவர் படத்திறப்பு விழாப்பேச்சில் மேலும் அவர் கூறுகையில் சென்னை கடற்கரையோரத்திலே சிலப்பதிகாரத்திலே வரும் காவிரிப்பூம்பட்டினக் கடற்கரையை உருவாக்கல் நீண்ட நாள் ஆசை என்றார்.[29] பண்டைய தமிழ் பேசும் நகரைக் கற்பனை செய்தலும் அதை அமைப்பித்தல் என்பதும் தமிழ் நிலம் பற்றிய ஏக்கமாகவும் அதனை மீளக்கொண்டு வந்து அடையாளமாக்கும் அரசியற் செயற்பாடாகவும் உள்ளது. இதன் செயல் வடிவமாக கன்னியாக்குமரியின் கடலின் கற்பாரில் திருவள்ளுவர் சிலையும் மெரீனாக் கடற்கரையோரம் அமைக்கப்பட்ட தமிழடையாள சிலைகளையும் கூறலாம்.

மேலும் அவர் பேசுகையில் சோவியத்திலுள்ளவர்கள் திருக்குறளைப் பயில்வதாகவும் ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதாகவும் இரண்டு வரிகளுக்குள் வாழ்வுத் தேவையைக் கூறுவதால் இளங்கோவை விட வள்ளுவர் முக்கியமாகிறார் என்றும் கூறினார். ரஷ்யாவுடன் போர்க்கருவிகளில், விஞ்ஞான வளர்ச்சியில் போட்டியிட முடியாது ஆனால் இலக்கியத்திலே போட்டியிட முடியும் என்றார்.[30]1949.1.15இல் பெரியாரால் திருவள்ளுவர் -குறள் மாநாடு கூட்டப்பட்டது. அங்கே, "கிறிஸ்தவனிற்கு விவிலிய நூல் போன்று தமிழனுக்கு திருக்குறள்" என தெ.பொ.மீனாட்சிசுந்தரம் பிள்ளை கூறினார்.[31] இங்கே இக்கூற்றுக் கூறியவரை

---

28 முத்துக்குமார், "வள்ளுவர் வரலாற்றைத் திரித்ததா திராவிட இயக்கம்?."
29 Arignaranna.net, "சிறப்புக்கட்டுரை: அறிஞர் அண்ணா"
30 மேலது.
31 மேலது.

எடுத்தால் காலனியத்திற்கு எதிராகவோ நிகராகவோ ஒரு மதம் சார் நிலையில் திருக்குறளை அடையாளப்படுத்தும் போக்குடையவராகக் காட்டுகிறது. இவ்வாறு தமிழ் எனும் பெரும் அடையாளப்பரப்பில் மதம் வழி தமிழை அடையாளப்படுத்தப்படுவதற்கான ஒரு வெளிப்பாடாக இதை எடுத்துக்கொள்ளலாம்.

உலகமகா யுத்தத்தின் போர் வெற்றி நினைவுச்சின்னம் ஒன்று மெரீனா கடற்கரை ஆரம்பிக்கும் இடத்தில் ஆங்கிலேயரால் கட்டப்பட்டிருந்தது. இத்தகைய நினைவுச்சின்னம் அமைத்தலை நவீன காலத்தில் காலனியவர்களின் மூலம் உள்ளூரவர்கள் அறிந்துகொள்கிறார்கள். 1959 இல் காந்தி சிலை, 'உழைப்பாளிகளின் வெற்றி' போன்ற சிலைகளும் 1964 இல் சுவாமி விவேகானந்தர் சிலையும் மெரீனாவில் நிறுவப்பட்டிருந்தன. இச்சிலைகளின் அடையாளங்கள் இந்தியத் தேசியம், இந்துத் தேசியம், உழைக்கும் மக்கள் என்பவற்றை வெளிப்படுத்துவதாக வாசிக்கலாம். பிரித்தானியரால் நிறுவப்பட்ட காலனிய நினைவுச்சின்னங்களுக்கு எதிர்வடிவங்களாக இங்கே காங்கிரஸ் அரசால் இந்துமதத் தேசியத்தை அதிகம் பிரதிநிதித்துவம் செய்யும் உருக்கள் வருவதுடன் 1968 இல் ஔவையார், கண்ணகி, திருவள்ளுவர், கம்பர், பாரதியார், கோல்ட்வெல், பாரதிதாசன், ஜோர்ஜ் போப், வீரமாமுனிவர் போன்றோருக்கான சிலைகள் தி.மு.க அரசால் நிறுவப்பட்டுள்ளன. முன்வைக்கப்பட்ட இந்துத் தேசியவாதத்திற்கான எதிர் வடிவங்களாக மீள் கண்டுபிடிக்கப்பட்ட பல தமிழ் இலக்கியம் சார் விக்கிரகங்களையும் தமிழ் மொழியில் பணியாற்றியவர்கள் எனப்படுவோரையும் முன்வைத்து தமிழ் அல்லது திராவிடத் தேசியம் முன்வைக்கப்படுவதாக வாசிக்கலாம்.

### திருவள்ளுவரிற்கான காண்பிய அடையாளம்

திருவள்ளுவர் என்ன தோற்றத்தில் இருந்தார் என்பதற்கான எந்த ஆதாரங்களும் இல்லை. இருக்க வாய்ப்புமில்லை. ஒருவரின் முகத்தோற்றம் உட்பட்ட தோற்றப்பாடுகளைப் பிரதிநிதித்துவம் செய்வது மெய்யுரு எனலாம். ஒருவரது தோற்றப்பாடு எவ்வாறு இருக்கும் என்பதே தெரியாமல் அவருக்கு உருவவியல் கொடுக்கும் போது அவ்வுருவை விக்கிரகம் எனக் கூறலாம். திருவள்ளுவர் உரு இங்கு விக்கிரகமாகவே பார்க்கப்பட வேண்டியது. இந்த விக்கிரகத்தனம் பொதுவாக எல்லா விக்கிரகத்திற்கும் உரிய இயல்புகளைக் கொண்டிருக்கும். உண்மையில் அதை உருவாக்குபவர்களைத் தான் அது பிரதிநிதித்துவம் செய்யும். உருவாக்குபவர்கள் தீர்மானிப்பவற்றை அது காண்பிக்கும்.

இதுவரை அறியப்பட்ட ஆதாரங்களின்படி பழமையான வள்ளுவரிற்கான விக்கிரகம் மயிலாப்பூரில் அகழ்ந்தெடுக்கப்பட்ட ஒரு இருக்கை நிலைச் சிலையாகும்(*படம்.01*) 14.15 ஆம் நூற்றாண்டிற்குரியது எனக் கருதப்படும் இச்சிலை பற்றி தமிழ் நாடு தொல்லியல் துறை ஆய்வாளர் சா.கிருஸ்ணமூர்த்தி தியான நிலையில் வலக்கை சின்முத்திரையுடன் அக்க மாலை ஏந்தியிருப்பதுடன், இடக்கை ஓலைச்சுவடி ஏந்திய படி உள்ளதுடன், முடிந்த கொண்டையும் முகத்தில் நீண்ட தாடியும் உடலில் ஓடும் பட்டையான அங்கியும் இடையில் ஆடையுமாக உள்ளது.[32]

---

32 மகாதேவன், "திருவள்ளுவரின் திருமேனி தாங்கிய தங்கக்காசு."

திருவள்ளுவரிற்குரிய காண்பிய அடையாளமானது ஆதாரத்திற்கு அப்பாற்பட்ட காலத்திலிருந்து அறுபடாது தொடர்ச்சியாக பரிமாறப்பட்டு வந்ததல்ல. ஆங்கிலேய ஆட்சிக்காலத்தில் சென்னை மாகாண வருவாய் அதிகாரி பிரான்சிஸ் வைர் எல்லிஸ்(1777-1819) காலனிய காலத்தில் முதன் முதலில் குறளிற்கு உரை எழுதியவர். திருக்குறளையும் திருவள்ளுவரையும் பதிப்பு அறிமுகமான காலத்தில் பரவலாக்கம் செய்வதற்கான தயார்ப்படுத்தல்களைச் செய்தவர்களில் ஒருவராக வைர் எல்லிஸைக் கருதலாம். எல்லிஸ் திருவள்ளுவருக்கு ஒரு தங்க நாணயத்தையும் வெளியிட்டார். ஒரு புறம் திருவள்ளுவரும் மறுபுறம் நட்சத்திரமுமாக அந்த நாணயம் அமைக்கப்பட்டிருந்தது.[33]






*படம்.1(இடது): மயிலாப்பூரில் அகழ்ந்தெடுக்கப்பட்ட சிலை, 14,15ஆம் நூற்றாண்டு, மூலம்: kural of valluvar blog.*

*படம்.2 (வலது): எல்லிஸால் வெளியிடப்பட்ட நாணயம், மூலம்: பிபிசி செய்திகள்.*

அந்த நாணயம் தான் நவீன காலத்தின் திருவள்ளுவரிற்கான முதலாவது உருவப்படமாகவும் உள்ளது. *(படம்.02)* திருவள்ளுவர் மீதான தீவிர ஆய்வுகளிற்கு முன்னரேயே காண்பிய உரு ஒன்று எல்லிஸால் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அவதானிக்கலாம். பத்மாசன இருக்கை, தோளில் ஒரு சால்வை, ஒரு கை முழந்தாளிலிருக்க மறு கை புத்தகம் போன்ற ஒன்றை வயிற்றுக்குக் குறுக்காக பற்றியுள்ளது போன்ற தோற்றம், மற்றும் மழிக்கப்பட்ட முடி, தலை மீது குடை என ஒரு சமண முனி போன்ற தோற்றத்தில் இங்கே உருவகப்படுத்தப்பட்டுள்ளது. திருவள்ளுவர் உருவிற்கான மிக ஆரம்பம் என்பது திருவள்ளுவர் ஒரு சமண மதத்தைச் சார்ந்தவர் எனும் அடிப்படையில் எல்லிஸ் உருவாக்கியுள்ளாரே தவிர வேறு எந்த உருவையும் அவர் உசாவவில்லை எனும் வகையில் 'திருவள்ளுவர் சமண மதத்தவர்' எனும் வாதத்திற்கு இது சாதகத்தன்மையை வழங்குகின்றது.

---

33 முரளிதரன், "திருவள்ளுவர் உருவம் உருவானது எப்படி இதுவரை எத்தனை உருவங்களில் அவர் வரையப்பட்டுள்ளார்."

திருவள்ளுவர் ஒரு சமண மதத்தவர் என்பதற்கான சாத்தியப்பாடுகளை திருக்குறளிலே பலரும் எடுத்துக்காட்டுகின்றனர். "திருக்குறள் ஜைன உரை" எனும் நூலில் ஸ்ரீகுந்த ஆசாரியார் எனும் சமண சமய பெரியவர் இந்நூலை எழுதினார் என்றும் அதனை அவரது மாணவரான "திருவுள்ளம் நயினார்" மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் அரங்கேற்றியதாகவும் வேங்கடராமையா கூறுகிறார். முதலாவது குறளாக வரும் "ஆதிபகவன்" என்பது சமண மதத்தவரின் முதல் தீர்த்தங்கரரான "ரிஷபதேவர்" என்றும், அவரே எண்ணையும் எழுத்தையும் தந்தவர் என சமண இலக்கியங்கள் குறிப்பிடுவதை வேங்கடராமையா எடுத்துக்காட்டுகிறார்.[34] ஏற்கனவே கூறியுள்ளது போல் கட்டுப்பெட்டித்தனமான இந்து உரையாசிரியர் பரிமேலழகர்கூட குறள் சமண தெய்வத்தையே குறிப்பிடுகிறது என்பதுடன் உடன்படுகிறார். இங்கு வள்ளுவரிற்கான உருவவியலைத் தீர்மானித்த பிரதான காரணி அவர் ஒரு சமணர் என்பது.

1885இல் ஊ.புஸ்பாதசெட்டியார் வெளியிடப்பட்ட "திருக்குறள் மூலமும் பரிமேலழகர் இலக்கணவுரையும்" நூலில் வள்ளுவருக்கு வழங்கப்பட்டுள்ள உருவில் மீசை, நீண்ட தாடி, நீண்ட காது, முடிந்து கட்டிய தலை முடி, வலது கையில் சின் முத்திரையுடன் உருத்திராட்சமாலை, இடது கையில் ஏடு, நெற்றியில் விபூதிப்பட்டையும் பொட்டும் என சம்மணம் போட்டு பீடம் ஒன்றின் மீது அமர்ந்திருக்கும்படி கோட்டு வரைபாகவே இது உள்ளது *(படம்.03)*. இது சைவ சமயம் சார் குறியீடுகளைக் கொண்டுள்ளமை மூலம் பதிப்பித்தவர்களின் சைவமத சார்பினை வெளிப்படுத்துவதாக அமைகிறது.


திருக்குறள் மூலமும்,
இலக்கணவுரையும்,
1885.




*படம்.3: "திருக்குறள் மூலமும் இலக்கணவுரையும்" நூலின் அட்டைப்படம், 1885. மூலம்: பிபிசி செய்திகள்*

34 முரளிதரன், "திருவள்ளுவர் உருவம் உருவானது எப்படி இதுவரை எத்தனை உருவங்களில் அவர் வரையப்பட்டுள்ளார்."

அடுத்து, 1904 இல் இந்து தியலோயிக்கல் மேல்நிலைப்பள்ளியில் தமிழ்ப் பண்டிதராக இருந்த கோ.வடிவேலு செட்டியார் என்பவர் "திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும்" எனும் நூலை வெளியிட்டார். இப்புத்தகத்தில் திருவள்ளுவநாயனார் அருளிச்செய்த தமிழ் வேதமாகிய... எனப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒரு சைவ நாயனாராகவே இவரை வர்ணித்துள்ளனர். திருநீற்றுப்பட்டை, குங்குமம், ஜடா முடி, தாடி மீசை, மார்புக்குக் குறுக்காக யோகப்பட்டை எனும் துண்டு, ஒரு கையில் சின் முத்திரையுடன் உருத்திராட்ச ஜெபமாலையும், மற்றொரு கையில் ஓலைச்சுவடியும் இருக்கிறது *(படம்.4)*. ஜடாமுடியுடன் கூடிய உருவம் கொடுக்கப்பட்டதற்கான விளக்கமும் இந்நூலில் உள்ளது. "நாயனார் சொரூபஸ்துதி" என்ற பாடலை அடிப்படையாக வைத்தே இந்த உருவம் திருவள்ளுவருக்கு கொடுக்கப்பட்டுள்ளதாக உள்ளது.[35] 1885 இல் வெளியிடப்பட்ட உருவின் விக்கிரகவியற் கூறுகளை இன்னும் தெளிவான ரேகையில் வரையப்பட்டுள்ளது. ஆனால் வள்ளுவரிற்கான அடையாளக் குறியீடுகள் வேறுபடவில்லை. இங்கு பதிப்பித்தவர்களின் இந்துமத விசுவாசக் கருத்தியலின் படி வள்ளுவரிற்கு சைவ சமய நாயன்மார் உரு வழங்கப்பட்டுள்ளமை வள்ளுவரை இந்து மத அடையாளத்திற்குள் உரிமை கோரும் போக்கை விக்கிரக ரீதியில் ஆரம்பித்து வைக்கின்றது.




*படம்.4: "திருக்குறள் மூலமும் இலக்கணவுரையும்" நூலின் அட்டைப்படம், 1904. மூலம்: பிபிசி செய்திகள்*

இதன் பின் இந்நூலின் ஆங்கிலப்பதிப்பு வெளியான போது அதிலுள்ள திருவள்ளுவர் உரு தமிழ்ப்பதிப்பில் வெளிவந்த விக்கிரகவியற் குறிகளுடன் இன்னும் சில குறிகள் சேர்க்கப்பட்டு வந்தது. நெற்றியில் மட்டுமல்லாது கைகளில் விபூதிப்பட்டையுடன் திருவள்ளுவர் மரத்தடியில் ஒரு பீடம் மீது அமர்ந்திருக்க இரு அடியார்கள் தொழுவது போல் படையல் போன்று பழங்கள் படைத்து வழிபடு நிலையில் அவ்வுரு சம்பந்தன் என்பவரால் வரையப்பட்டுள்ளது *(படம். 5)*.[36]

35 முரளிதரன், "திருவள்ளுவர் உருவம் உருவானது எப்படி இதுவரை எத்தனை உருவங்களில் அவர் வரையப்பட்டுள்ளார்."

36 மேலது.



படம்.5:சம்பந்தனால் வரையப்பட்ட வள்ளுவர் உரு. மூலம்: பிபிசி செய்திகள்

இதன் பின்னர் சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் வெளியிட்ட நூல்களில் திருவள்ளுவர் படங்கள் ஏறக்குறைய இதே தோற்றத்தில் தான் இடம்பெற்றன. அதில் பல படங்கள் தமிழ் நாட்டில் பல வீடுகளில் வைத்து வணங்கப்பட்டன, அதிலும் பல படங்களில் யோகப்பட்டைக்குப் பதிலாக மார்பிற்குக் குறுக்கே பூனூல் அணியப்பெற்றிருந்தது.[37] அடுத்து, "திருவள்ளுவர் நூல் நயம்" எனும் நூலில் யோகப்பட்டைக்குப் பதிலாக பூனூல் போடப்பட்டிருந்தது என முரளிதரன் உருவினை வாசிக்கிறார் *(படம்-6)*. ஆனால் அது பூனூல் போன்றில்லை வெண்ணிறப்பட்டையாகத் தெரிகிறது. இது யோகப்பட்டையாக இருக்கலாம். பாலு-சீனு என்ற சகோதரர்கள் நடாத்திய "கலை" என்ற இதழில் 1950களில் பிரசுரித்த திருவள்ளுவர் படம் எந்த மத சின்னமுமின்றி காண்பியம் செய்யப்பட்டுள்ளது[38](படம் கிடைக்கப்பெறவில்லை).




படம்.6: "திருவள்ளுவர் நூல் நயம்" நூலின் அட்டைப்படம்,1956. மூலம்: பிபிசி செய்திகள்.

37 முரளிதரன், "திருவள்ளுவர் உருவம் உருவானது எப்படி இதுவரை எத்தனை உருவங்களில் அவர் வரையப்பட்டுள்ளார்."

38 மேலது.



*படம்.7: சுப்பிரமணிய சுவாமி வரைந்த உரு, 2000. மூலம்:* kural of valluvar blog

அடுத்து, சுப்பிரமணிய சுவாமியால் 2000 இல் வரையப்பட்ட ஓவியமானது *(படம். 7)* 1950களில் வேணுகோபாலினால் வரையப்பட்ட ஓவியத்தின் உருவவியலுடன் விபூதிக்குறிகள் சேர்த்து வரையப்பட்டிருக்கிறது. அத்துடன் "....படி சொல் தவறாத பாவாய்...." [39] போன்ற குறள்களின் படி குறள் வழியானதும் இந்து மத சார்பானவர்கள் முன்வைக்கும் கதையான திருவள்ளுவர் மனைவியை அழைக்கையில் கிணற்றில் நீர் அள்ளிக்கொண்டிருந்தவர் பாதிக்குறையிலேயே விட்டு வந்ததாகக் கூறப்படும் கதையை இணைத்து அச்சம்பவத்தை பின்னணியில் கொண்டுவந்துள்ளார்.

இன்று பரவலாக அறியப்பட்டு அரச அதிகாரபூர்வமான திருவள்ளுவர் உருவம் என ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓவியம் 1950 களின் பிற்பகுதியில் வரையப்பட்டது*(படம்.8)*.[40] தமிழ் அடையாள விக்கிரக வரிசையில் இதுவே மாயவாதப்பாணியில் வரையப்பட்ட முதலாவது ஓவியமாகும். இருக்கை நிலையில் மட்டுமன்றி இதே விக்கிரகவியலைக் காட்டும் நிற்றல் உருவையும் வரைந்துள்ளார். வள்ளுவர் ஓவியத்தை வரைவித்தவர்கள் அவ்வுருவிற்கான கருத்தியலிற்காக மட்டுமன்றி மாயவாத ஓவியத்திற்கேயுரிய கவர்ச்சியாலும் அதை அசலான வள்ளுவராக ஏற்றனர் எனலாம்.

குறித்த வள்ளுவர் ஓவியம் வரைவதற்கான முயற்சியைத் தொடங்கிய கவிஞர் பாரதிதாசன், திராவிட கழகத்தைச்சேர்ந்த ராமச்செல்வன் என்பாருடன் வந்து இவ்வோவியத்தை வரைவதற்கான திட்டமிடலைச் செய்ததாகவும் இதற்கான செலவினை ராமச்செல்வன் ஏற்றுக்கொண்டார் எனவும் திராவிட இயக்க ஆய்வாளர் க. திருநாவுக்கரசு குறிப்பிடுகிறார். ஓவியர் வேணுகோபாலின்

39 Thirukkural of Thiruvalluvar "An introduction to Kural & its author."

40 ஸ்ரீராம் சர்மா, "சிறப்புக்கட்டுரை:மழித்தலும் நீட்டலும்."

மகன் இந்த ஓவிய ஒப்பந்தங்கள் பற்றிக்கூறாமல் வேறு விடயம் ஒன்றைக் கூறுகிறார். ஓவியம் வரைந்த இடத்திற்கு வந்த பாரதிதாசன் ஓவியத்தைப் பார்த்தவுடன் "திருவள்ளுவர்" எனக் கூறியதாகத் தெரிவிக்கிறார். ஓவியர் தன் சிறு வயதிலிருந்தே வள்ளுவரிற்கு உருவம் அமைக்க வேண்டும் என்பதில் பிரயத்தனப்பட்டவர் என்றும் அதற்காக திருக்குறளை சிறப்பாக பயின்றவர் என்பதையும் அவரது மகன் தெரிவிக்கிறார்.[41] ஓவிய ஒப்பந்தங்கள் பற்றிய உண்மைத்தன்மையை ஆராய்வதை விட காண்பியங்களிற்குள் செல்வதில் கவனம் செலுத்த விளைகிறேன்.





By K.R.Venugopal Sarma THIRUVALLUVAR Approved by Govt. of India

*படம்.8 (இடது): வேணுகோபால் சர்மா, 1950. மூலம்: பிபிசி செய்திகள்*
*படம்.9 (வலது): வேணுகோபால் சர்மா வரைந்த வள்ளுவர் உரு, 1950. மூலம்: பிபிசி செய்திகள்*

"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம் பழித்ததை ஒழித்து விடின்" இக்குறளில் தலை மழித்தலையும், தாடி வளர்த்தலையும் வேண்டாம் என வள்ளுவர் கூறியிருப்பினும் திருவள்ளுவரிற்கு ஏன் நீண்ட சடாமுடியும் வளர்ந்து நீவப்பட்ட தாடியும் வைத்து உருவம் அமைக்கப்பட்டுள்ளது எனும் கேள்விக்கு வேணுகோபால்சர்மா எழுதிய "திருவள்ளுவர் திருவுருவப்படவிளக்கம்" எனும் நூலில் தான் வரைந்த திருவள்ளுவர் ஓவிய உருவத்திற்கான விளக்கத்தை அளித்துள்ளார் என ஓவியரின் மகன் விளக்குகிறார்: திருவள்ளுவரிற்கு 600 வருடங்களுக்கு முன்பு தோன்றிய மகாவீரர் அஹிம்சை, சத்தியம், அஸ்தேயம்(திருடாமை), பிரம்மச்சரியம், அபாரிகிருகம்(பற்றற்றிருத்தல்) போன்ற ஐந்து உறுதி மொழிகளை எடுக்கச்சொல்கிறாரே தவிர தலையை மொட்டையடிக்க வேண்டும் எனக்கூறவில்லை. உண்மையில் ரிஷபநாதா, மகாவீரர் மற்றும் புத்தர் போன்றோரின் உருக்களில் கூட தலை மழிக்கப்பட்டிருக்கவில்லை. பிறகு எதற்கு சமண, பௌத்த மதகுருக்கள் தலையை மழிக்கிறார்கள் எனும் கேள்விக்குப்பின்னால் சமயச்சண்டைகள், வேற்றுமைகள் என்பன இருந்ததாகவும் திருவள்ளுவர் அதில் மத்தியஸ்தம்

---

41 ஶ்ரீராம் சர்மா, "சிறப்புக்கட்டுரை:மழித்தலும் நீட்டலும்."

புரிவதாகவும் ஓவியர் கருதுவதை எடுத்துக்காட்டும் ஓவியரின் மகன் கிட்டத்தட்ட கி.பி 7ஆம் நூற்றாண்டில் நாயன்மார், ஆழ்வார் தோன்றிய காலத்திலிருந்து தான் மதச்சண்டை ஆரம்பமானது என்றில்லை அதற்கு முன்னரேயே இது நீண்ட காலமாக தொடர்கிறது என சீனி வெங்கடசாமி கூறுவதையும் குறிப்பிட்டுக்காட்டுகிறார்.[42]

திருவள்ளுவரிற்குக் கிட்டத்தட்ட 600 வருடங்களிற்கு முன்னால் எழுச்சியடைந்திருந்த சமண, பௌத்த சமயம் ஆகிய இவ்விரண்டின் கருத்தாக்கங்களும் கிட்டத்தட்ட கி.பி 7ஆம் நூற்றாண்டு வரை செல்வாக்குடன் இருந்தன. ஆதலால் இதற்கும் முற்பட்ட காலத்தையுடைய சைவ, வைணவ சமயங்கள் இதனுடன் முரண்பட்டிருக்கவேண்டும். சைவ, வைணவ சமயங்களில் சொல்லும் நியாயத்தையும் உணர்ந்து ஏற்றுக்கொண்ட திருவள்ளுவர் மத்தியஸ்தம் செய்வதாக இக்குறளை எடுத்துக்கொள்வதற்கான சாத்தியப்பாடுகளும் இருக்கக்கூடும். "நீ மழுங்க மொட்டையடித்துக்கொள்ளவும் வேண்டாம் தாடி முடி நீட்டிக்காட்டவும் வேண்டாம் இம்மக்கள் எதனால் வெறுக்கிறார்களோ அதை மட்டும் விட்டு உய்யும் வழியைப்பாருங்கள்"எனும் தோரணையில் இக்குறள் அமைக்கப்பட்டிருக்கிறது என்பதாக ஓவியர் கூறியுள்ளார். இவ்வாறு குறித்த ஓவியர் குறளை வியாக்கியானித்ததன்படி வள்ளுவரிற்கான தாடி, தலை முடி என்பவற்றை அமைத்திருக்கிறார் எனக்கூறுகின்றனர்.[43]

மேலும் வள்ளுவரிற்கு அவரது குறள்களின் கருத்தியலிற்கேற்பவே உருவம் வழங்கப்பட்டதாகக் கூறுகிறார்: திருவள்ளுவர் கருத்துலகில் வாழ்ந்தவர் என்பதால் அவரைச்சுற்றி மரம் செடி வீடுகளற்று அறிவொளி மட்டும் இருப்பதாகக் காட்டப்பட்டுள்ளது. அவரது சிந்தனை செயல் போன்றன அழுக்குத் தீண்டாமல் இருப்பதற்காக சிறு மரப்பலகை மீது அமர்ந்திருப்பதாகவும் உள்ளம், நோக்கு, வாக்கு என்பன துய்மை நிறைந்துள்ளதால் வெண்ணிற ஆடை அணிவித்திருப்பதாகவும் பின்புறம் வளர்க்கப்படும் குடுமியும், வெட்டப்பட்ட சிகையும் பல இனக்குழுக்களுக்கு அடையாளமாகிவிட்டதால் நீண்ட முடியும், நீவப்படாத தாடியும் இருப்பது போல் வரைந்ததாக ஓவியர் வேணுகோபால் கூறுகிறார்.[44] உலகப்பொதுவான அற நூலாக இது இருக்கும் காரணத்திற்காக வள்ளுவரிற்கு யதார்த்தப்பாணியில் உருவம் வழங்கப்படாது இலட்சியார்த்த உருவம் கொடுக்கப்பட்டதாகவும் கூறுகிறார்.[45] வள்ளுவரின் இவ்வுருவில் ஓர் "ஆரியச்சாயல்" இருப்பதானது உள்நாட்டின் அடையாளப்பூசல்கள் பற்றி சிந்திக்கவும் வைக்கிறது. உள்நாட்டின் மத அடையாளப்பூசல்களின் பொருட்டு உலகமைய வாதமாக இருக்கும் "ஆரிய நிறத்தை" தகவமைத்தலில் சில முரண்பாடுகள் தோன்றுகின்றன.

எல்லிஸ் மற்றும் கால்டுவெல் போன்றோர் இந்தியாவிலுள்ள மொழிகளைக்கொண்டு பிரித்த திராவிடர்-ஆரியர் எனும் பிரிப்பில் உள்நாட்டுக்குள்ளேயே 'ஆரியர்' என வகைப்படுத்தப்படுவோர் இந்து மத அடையாளங்களுடன் இருக்கையில் இந்நிற அடையாளம் குறித்த தரப்புடன் இணங்கிப்போவதை இவர்கள் கவனிக்கவில்லை என்றுபடுகிறது. (ஆரிய- திராவிட பிரிப்பை ஏற்றுக்கொண்டிருந்தால்). அவ்வாறில்லாது பொதுவான நிறமாக மேலைத்தேசத்தவரின் நிறத்தை எடுத்தமையும் சிக்கலான ஒன்றே அதுவும் "ஆரிய மேன்மை வாதத்திற்கு" துணைநிற்கிறது.

---

42 ஸ்ரீராம் சர்மா, "சிறப்புக்கட்டுரை-2."
43 மேலது.
44 மேலது.
45 மேலது.

அல்லது நிற மேன்மைவாதம் அவர்களிடம் இருந்திருக்கக்கூடும். திருவள்ளுவரிற்குப் பின்வரும் பாரதி போன்ற பல உருவங்களும் வெளிர் நிற ஆரியச்சாயலைக் கொண்டுவரும் உளவியலை இது ஊக்குவித்துள்ளது எனக் கருதுகிறேன். இந்தத் தாக்கங்களுக்கு ரவிவர்மாவின் மாயவாதக் கடவுளர் ஓவியங்களிற்குப் பெரும் பங்களிப்பு உண்டு. ஓவியர் மாயவாதப் பாணியில் ஓவியம் வரைகையில் ரவிவர்மாவின் சிவன், முனிவர் போன்ற உருக்களின் தாக்கத்தினைப் பெற்றிருக்கக் கூடும் என்பதை வள்ளுவருக்கு வழங்கப்பட்ட தாடி, தலை முடி, உடற்த்தோற்றம் உட்பட்ட உருவவியலில் விளங்கிக்கொள்ளலாம். இது விரிவாக தனித்து விவாதிக்க வேண்டிய ஒன்று. அகழ்வில் எடுக்கப்பட்ட வள்ளுவர் சிற்பத்தின் உருவுடனும் இது ஒப்பிடத்தக்க வகையிலுள்ளது. இதுவரை வள்ளுவருக்கு வழங்கப்பட்ட உருக்களிலிருந்து இவ்வுரு வேறுபடும் புள்ளிகளில் ஒன்று வள்ளுவர் பார்வை கொள்ளும் முறை. பார்வையாளரை நேராக முகங்கொள்ளாதிருக்கும் தோற்றப்பாடு பார்வையாளரிடமிருந்து விலத்தி வள்ளுவர் ஒரு சாமானியர் அல்ல என்பது போலுள்ளது.

வெண்ணிற ஆடையினை சமண மதத்திற்கான குறியீடாக வாசிக்கும் போக்கும் உள்ளது. அதன்படி வள்ளுவர் உருவம் மதம் சார்ந்தது எனவும் சிலர் கூறுவர். இந்து மதத்தின் காவி நிறத்திற்கு எதிரான நிறமாக வெள்ளை நிறத்தை தெரிவுசெய்திருக்கலாம், அல்லது திருவள்ளுவர் ஒரு சமணமதத்தவர் என ஆதாரங்களில் முடிவுகண்ட இவர்கள் அம்மதத்தினைக் குறியீடு செய்யும் ஆடையைத் தெரிவு செய்திருக்கலாம். சமண மதம் கடைக்கொள்ளப்படாத கடந்தகாலத்தின் மதமாகவும், இந்து மதத்தின் கொள்கைகளை எதிர்த்து சீர்திருத்தும் பண்புகள் கொண்டதாலும் தமிழின் மரபாக அம்மத அடையாளத்தின் பொருத்தப்பாடு கருதி சேர்த்திருக்கலாம். இவ்விடத்தில் மத நிறுவனத்திற்கான அல்லது மதத்தைக் கடைக்கொள்ளும் மக்களிற்கான அரசியல் இடம்பெறவில்லை எனும் வகையில் வெண்ணிற ஆடை சமண மத அரசியல் நீக்கம் பெற்ற குறியாகச் செயற்படுவதாகவும் கருத இடமுண்டு. வழக்கொழிந்த மதமாக அல்லது மிகச்சிறுபான்மையாக மத அரசியலாகப் பரிணமிக்கச் சாத்தியமற்ற மதம் என்பதாலும், அது இந்து மதத்திற்கு எதிரான போக்கினைக் கொண்டு தமிழில் இலக்கியங்கள் படைத்திருப்பதால் தமிழின் "மரபு"எனும் தகுதியின் அடிப்படையில் இது உள்வாங்கப்பட்டிருக்கலாம். அல்லது ஓவியர் வேணுகோபால் முன்வைத்தது போல் வள்ளுவரின் வாக்கு உட்பட்ட விடயங்களின் தூய்மை காரணமாகவும் இந்நிறம் கொண்டுவந்திருக்கலாம். வள்ளுவர் உருவம் தமிழ் மக்களிடையே பரவிய முறைகளில் அவர் ஒரு சைவராகவே பொதுமக்கள் மனங்களில் சென்றடைந்துள்ளார். சைவமும் தமிழும் இயக்கம் இதன் பரவுகைக்குக் காரணமாக உள்ளது.

ஏனைய சில உருக்கள் போலவே திருவள்ளுவரின் உருவும் ஒவ்வொரு காலகட்டத்திலும் மாற்றத்திற்குள்ளாக்கப்பட்டு வருவதை அவதானிக்கையில் திருக்குறளை எழுதியோர் எனும் வகையில் அந்நூலாசிரியருக்கு உருவம் தோற்றுவிக்கப்பட்டமை (ஆதாரபூர்வமாக) அண்மைய சில நூற்றாண்டுகளாகத் தீவிரமாக நிகழ்ந்து வருகிறது என்பது திருவள்ளுவர் உருவைச் சூழ்ந்திருக்கும் அரசியலை இனங்காண்பதற்கான தேவையையும் ஒருங்கே ஏற்படுத்திவிடுகிறது.

**வேணுகோபாலின் வள்ளுவர் ஓவியம் - அரசியல்**

வேணுகோபால் வள்ளுவர் ஓவியத்தை வரைந்து முடித்த பின் காமராஜர், சி.என் அண்ணாத்துரை, மு.கருணாநிதி, நெடுஞ்செழியன் போன்ற ஆளுமைகள், கல்வியாளர்கள் பலர்

இவ்ஓவியத்தைப் பாராட்டி விட்டுச்சென்றிருந்தனர். பின்னர் இப்படம் காங்கிரஸ் மைதானத்தில் வெளியிடப்பட்டது. தி.மு.க சட்டமன்றத்திற்குள் வந்த பின் இப்படம் சட்ட மன்றத்தில் வைக்க வேண்டுமென மு.கருணாநிதி கோரிக்கை வைக்க அதற்கு முதல்வர் பக்தவத்சலம், மு.கருணாநிதி ஒரு படத்தை வாங்கித்தந்தால் வைப்பதில் ஆட்சேபனை இல்லை என்றுள்ளார். 1964.3.23 இல் தமிழக சட்டமன்றத்தில் திருவள்ளுவர் உருவத்தைக் குடியரசுத் தலைவராக இருந்த ஜாகிர் ஹுசைன் திறந்து வைத்தார்.[46]

வள்ளுவரிற்கு பூனூல் இடப்பட்டிருந்ததாகவும் பின்னர் மேலாடை வரையப்பட்டு அது மறைக்கப்பட்டது என 2011 இல் திருவள்ளுவர் நாள் விழாவில் தமிழக முதல்வராக இருந்த மு.கருணாநிதி கூறியுள்ளார்.[47] ஓவியம் வரைந்தவர் பிராமணர் என்பதையும் இங்கு அவதானம் கொள்ளலாம். தி.மு.க கட்சியின் கொள்கையிலடங்கும் மதசார்பற்ற தன்மை, இந்து மதத்திற்கு எதிரான விசை என்பன வள்ளுவர் கருத்துருவை அவர்கள் எடுத்துக் கொள்வதற்கும் வள்ளுவர் உருவை அமைப்பதற்கும் சாதகத்தன்மையை வழங்கியுள்ளது என்றும் தமிழடையாளம் என்பது தி.மு.க கட்சி முன்வைக்கும் கொள்கையைப் பிரதிநிதித்துவம் செய்வதாகவும் அமைகிறது என்றும் வாதிடலாம்.

குறித்த ஓவியம் அரசால் அங்கீகரிக்கப்பட்ட திருவள்ளுவர் படமாக அறிவிக்கப்பட்டு தமிழக அரசால் அரசாணையும் அறிவிக்கப்பட்டது. 1967 இல் அன்றைய தி.மு.க ஆட்சியில் முதல்வராக இருந்த சி.என் அண்ணாத்துரையால் வெளியிடப்பட்ட ஜி.ஓ.எம்.எஸ் 1793 எனும் அரசாணையினால் தமிழகம் எங்குமுள்ள பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், நீதிமன்றங்கள், காவல்நிலையங்கள், பஞ்சாயத்து அலுவலகங்கள் மற்றும் அனைத்து பேரூந்துகளிலும் இவ்ஓவியப்பிரதிகள் வைக்கப்பட்டு வள்ளுவர் என நிலை நிறுத்தப்பட்டது.[48] அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்ட திருவள்ளுவரிற்கு தமிழ் மாநாட்டில் 1995 இல் முத்திரை *(படம்.10)*, நாணயம் *(படம்.11)* என்பனவும் வெளியிடப்பட்டன.[49]

இதுவரை வள்ளுவருக்கு பன்மையான உருவவியல் வழங்கப்பட்டு வந்தது. இக்குறித்த ஓவியத்திற்குப் பின் ஏனைய புறக்கருத்தியல் தாக்கம் உள்ள புனைவுகளுக்கான வாய்ப்புகள் குறைவாக இருக்கும் படியானது. இது தான் வள்ளுவர் என அரச அங்கீகாரம் பெற்று அவ்வுருவை சகல தரப்பு மக்களிடமும் பரப்பும் வேலைத்திட்டத்தினூடு தான் குறித்த உருவம் பலமடைந்தது. அவ் உருவம் பிரதிநிதித்துவம் செய்யும் குழுவும் ஒரு வகையில் அதன் மூலம் பலமடைந்தது.

இந்த ஓவிய உருவின் அடிப்படையிலேயே சென்னை, மயிலாப்பூரில் அமர்ந்த நிலையிலான வள்ளுவர் உருவம் அமைக்கப்பட்டது.(மயிலாப்பூர் வள்ளுவர் பிறந்த இடமாக நம்பப்படுகிறது.) சிலைகள் தமிழடையாளத்தின் பொருட்டு உருவாக்கல் என்பது தமிழ் நிலத்தை அல்லது தமிழ் மக்களின் வாழ்விடத்தை அடையாளம் செய்யும் அரசியல் திட்டமாக அவதானிக்க முடியும். இதே விக்கிரகவியலை வெளிப்படுத்தும் வள்ளுவர் சிலைகள் பல்வேறு புவியியற் பரப்புகளிலும்

---

46 முரளிதரன், "திருவள்ளுவர் உருவம் உருவானது எப்படி இதுவரை எத்தனை உருவங்களில் அவர் வரையப்பட்டுள்ளார்."

47 New Indian-Chennai News + more "திருவள்ளுவர்,தொல்காப்பியர் சிலையும் சிதைக்கப்படும் தமிழர் மரபு."

48 முரளிதரன், "திருவள்ளுவர் உருவம் உருவானது எப்படி இதுவரை எத்தனை உருவங்களில் அவர் வரையப்பட்டுள்ளார்."

49 Viator, "Valluvar Kottam Tours and Activities."

தாபிப்பதைப் பின்னர் அவதானிக்கலாம். தேசம் என்பது கற்பனை செய்யப்பட்ட அரசியல் சமூகம் என பெனடிக்ட் அண்டர்சன் கூறும் கருத்தை இங்கு பொருத்திப் பார்க்கலாம்.[50] இந்த கற்பனை செய்யப்பட்ட சமூகத்தினை ஒன்றிணைப்பதற்கான நிலவரைபுகளில் பொருத்தமான அடையாளங்கள் தெரிவுசெய்யப்பட்டு நாட்டப்படும். அதற்கான எடுத்துக்காட்டுகளாக வள்ளுவர் சிற்ப நிர்மாணங்களைப் பார்க்கலாம்.







*படம்.10 (இடது): வள்ளுவர் உரு பொறிக்கப்பட்ட முத்திரை, 1995. மூலம்: விக்கிப்பீடியா.*
*படம்.11 (வலது): வள்ளுவர் உரு பொறிக்கப்பட்ட நாணயம், 1995. மூலம்: விக்கிப்பீடியா.*

பதிப்புப் புரட்சியாலும் அதனைத் தொடர்ந்து வரும் பதிப்பு முதலாளித்துவத்தினாலும் தேசியவாதத்தின் மூலமானது உருவாகிறது என்கிறார் பெனடிக்ட் அண்டர்சன். பண்டைய தமிழ் நூல்களை பதிப்பிக்கப்பட்டதன் மூலமே இத்தேசியவாத எண்ணக்கருக்கள் இங்கே பலமாகத்தொடங்கியது. அதனை மக்களிடையே பரவச்செய்ததும் இந்த பதிப்புக் கலாசாரமே. தொடர்பாடல் தொழிநுட்பம் ஒரு "பூகோளக் கிராமம்" ஒன்றினை உருவாக்குவதாக எம். சி.லுகான் ஏற்கனவே(1964) கூறியிருந்தார். அரசுக்கும் மக்களிற்குமிடையிலான பந்தம் தொழிநுட்பம் மூலம் ஏற்படுத்தப்படுகிறது என அண்டர்சன் குறிப்பிடுகிறார்.[51]இதன்படி அரசு எவ்வாறு தேசியவாதத்தை முன் வைத்து நவீன தொழிநுட்பங்களுடாக மக்களை ஒற்றைத் தேசியவாதக் கூரைக்குள் கொண்டுவருகிறது என வாசிக்கலாம்.

திராவிடவாதத்தை முன்வைத்தவர்களின் கொள்கைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கொள்கைகள் சிலவற்றின் அடிப்படையில் தான் வள்ளுவர் விக்கிரகவியல் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழக முதல்வராக இருந்த அண்ணாதுரை, கருணாநிதி போன்றோரால் முன்னெடுக்கப்படும் தீர்மானங்களின் அடிப்படையில் அக் கொள்கைகளை வரையறுக்கலாம். தமது முன்னோடியாகவும் அரசியல் வழிகாட்டியாகவும் இவர்களால் கருதப்படும் பெரியாரினால் முன்வைக்கப்பட்ட கொள்கைகளிலிருந்து சமூக நீதி, பகுத்தறிவு, சாதி மறுப்பு, கடவுள் மறுப்பு, பெண்விடுதலை

50 Anderson, *Long Distance Nationalism: World Capitalism and the Rise of Identity Politics,* 5 - 6.
51 Breuilly, "Benedict Anderson's imagined communities: a symposium", 5, 6.

போன்ற கொள்கைகளை தமது வசதிக்கேற்ப பயன்படுத்தினர் என்றே கூறலாம். அவற்றைப் பின்பற்றுகையில் அக் கொள்கைகளுக்கு எதிரான செயற்பாடுகளையும் மேற்கொள்ளும் படியாகியுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த மு.கருணாநிதியால் 1970 இல் தீர்மானித்து தென்னிந்திய மரபார்ந்த கட்டடவியலாளரான வி. கணபதி ஸ்தபதியால் வடிவமைக்கப்பட்டு 1976 இல் வள்ளுவரிற்கு ஒரு நினைவுச் சன்னதியாக வள்ளுவர் கோட்டம் கட்டி முடிக்கப்பட்டது. குறள் மணிமண்டபம் 1333 குறள்களையும் பொறிப்புகளாகக் கொண்டுள்ளதுடன் மரபார்ந்த திராவிடக்கோயில் கட்டடப்பாணியின்படி கட்டப்பட்டுள்ள கற்தேரில் (35 மீற்றர்) வள்ளுவருக்கான சிலை ஒன்று தாபிக்கப்பட்டிருப்பதுடன் தேரின் கீழ்ப்பகுதியிலுள்ள செதுக்கல்கள் குறளின் 133 அதிகாரங்களை படவிளக்கமாகக் காட்டுகின்றன. [52]இங்குள்ள வள்ளுவர் உரு வேணுகோபால் மூலம் வழங்கப்பட்ட விக்கிரகவியல் அம்சங்களைத்தான் கொண்டுள்ளது. ஆனால் கன்னியாக்குமரியிலுள்ள நிற்கும் வள்ளுவர் சிலையைப் போன்று இச்சிலையும் தொல்சீர்த்தன்மையை உருவவியலில் வெளிப்படுத்துகிறது. முழுமையான யதார்த்தவாதத்தை எடுத்துக்கொள்ளாது எளிமைப்படுத்தப்பட்ட உடற்கூறுகளைக் கொண்டதாக இச்சிலை வடிவமைக்கப்பட்டுள்ளது.

கன்னியாக்குமரியிலுள்ள திருவள்ளுவர் சிலை பற்றி இனிப் பார்ப்போம். வள்ளுவர் சிலைக்கான கல்வெட்டில் பின்வருமாறு பொறிக்கப்பட்டுள்ளது. "குமரிமுனையில் வள்ளுவர் சிலை 1975இல் முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் அமைச்சரவையில் முடிவெடுத்து அறிவித்தது. 1979இல் முதலமைச்சர் திரு.எம்.ஜி.ஆர் தலைமையில் பிரதமர் திரு.மொரார்ஜி தேசாய் அடிக்கல் நாட்டினார். பின்னர் 10 ஆண்டுகளுக்குப்பிறகு 1989இல் முதலமைச்சர் கலைஞர் வள்ளுவர் சிலைக்கான பணிகளைத் தொடங்கி வைத்து அடிக்கல் நாட்டினார். பின்னர் 7 ஆண்டுகளிற்குப்பிறகு கலைஞர் முதல்வரானதும் வள்ளுவர் சிலை வடிக்கும் பணி மீண்டும் தொடங்கியது. நிறைவாக 31.12.1999-1.1.2000 ஆகிய நாட்களில் வானுயர வள்ளுவர் சிலை திறப்புவிழா. முதலமைச்சர் கருணாநிதி 1.1.2000 அன்று சிலையைத்திறந்து வைத்தார்."[53]

30 வருடத்திற்குப் பின்னரே வள்ளுவர் சிலை அமைப்பு சாத்தியமாகியுள்ளது. கன்னியாக்குமரியின் கற்பாரில் திருவள்ளுவரிற்கு சிலை எடுத்தது கருணாநிதி என தி.மு.க வினால் தொடர்ச்சியாகக் கூறப்பட்டுவருகிறது. சிலை வைப்பில் எம்.ஜி.ஆரின் பங்கு தி.மு.க வால் மறைக்கப்படுகிறது என அ.தி.மு.க வினால் கூறப்பட்டு வந்துள்ளது. தேர்தல் அரசியலில் எவ்வாறு வள்ளுவர் சிலை அமைப்பு பேசுபொருளாகியுள்ளது என்பதை இதில் அவதானிக்கலாம்.[54]

1970 இல் விவேகானந்தர் மண்டபம் கன்னியாகுமரியின் இரு கற்பார்களில் ஒரு கற்பாரில் அமைக்கப்பட்டிருந்தது. 1971 சட்டமன்றத்தேர்வில் அண்ணாதுரைக்குப் பின் முதலமைச்சரான கருணாநிதி வள்ளுவரிற்குச் சிலை எடுக்க விரும்பினார். இந்தியாவின் தெற்கு எல்லை கன்னியாகுமரியின் அடையாளமாக விவேகானந்தர் பாறை தான் இருந்தது. இப்பாறையில் ஒரு காவிக்கொடியும் பறக்கும். அவ் அடையாளத்தை மாற்றி "தமிழரின் அடையாள"த்தை நிறுவுவது கருணாநிதியின் நீண்ட காலத்திட்டம்.[55]

52 Viator, "Valluvar Kottam Tours and Activities."
53 News 7 tamil, "வள்ளுவர் சிலையின் வரலாறு."
54 மேலது.
55 ஆதனூர்சோழன். "கலைஞரின் அய்யன் திருவள்ளுவர்."



படம்.12: வள்ளுவர் கோட்டத்திலுள்ள வள்ளுவர் சிற்பம், 1976. மூலம்: விக்கிப்பீடியா

இவை நேரடியாகவே அடையாள நெருக்கடிகளைக் காட்டுவதாக உள்ளது. தமிழருக்குரிய அடையாளமாக திருவள்ளுவரைக் கருணாநிதி அமைத்துள்ளார் என்பதுடன் அச்சிலை தி.மு.க. வினை அதிகபடியாகவும் அ.தி.மு.க வை அடுத்தபடியாகவும் அடையாளப்படுத்துகிறது. இந்து மதத்திற்கு எதிரான போக்கினை தமிழ் அடையாள உருக்கள் கொண்டுவருதலை இச் செயற்றிட்டம் காண்பிக்கிறது. இந்து. இந்திய அடையாளத்திற்கு எதிராக திருவள்ளுவரை ஒரு தமிழ் அடையாளமாக முன்வைத்தல் என்பது இந்து. இந்திய வாதங்களின் ஒடுக்குமுறைகளுக்கான (இந்தித் திணிப்பு. பார்ப்பன மேலாண்மை) எதிர்ப்பு வடிவங்களாக இனங்காணப்படக் கூடியவை. தி.மு.க வின் கொள்கையில் மு.கருணாநிதி போன்றோரால் இந்து மத மறுப்பு. தமிழ் மொழிவழி அடையாளத்தை முன்நிலைப்படுத்தல் என்பன பின்பற்றப்படுகையில் அவர்கள் அவற்றை துலக்கமாக முன்வைத்து அரசியல் செய்யும் தந்திரமாகக்கூட இவை வாசிக்கப்படக்கூடியன.

கருணாநிதி கூறியதற்கேற்ப திருவள்ளுவர் வரைபடம். திட்டமதிப்பீடு என்பவற்றை கணபதி ஸ்தபதி தயாரித்து 1990 இல் அதிகாரபூர்வமாக சிற்பம் தொடங்கிய பின்னரும் கருணாநிதி ஆட்சி கலைக்கப்பட்டு 1996 இல் ஆட்சிக்கு வந்த கருணாநிதி இச்சிலையை இம்முறை அமைத்தே தீருவேன் எனும் முடிவில் 19.10.1999 இச்சிலை முழுமையாகக் கட்டியெழுப்பப்பட்டது. 31.12.1999-1.1.2000 என இரு நாட்கள் இச்சிலையின் திறப்புவிழா விமர்சையாகக் கொண்டாடப்பட்டது.[56] புதிய நூற்றாண்டு வள்ளுவரின் சிலை திறப்புடன் தொடங்கியது. "திருவேங்கடம் முதல் தென்குமரி ஆயிடை தமிழ் கூறு நல்லுலகு" காண்பியச் சாத்தியமாகியது (குமரிக்கண்டம் தற்காலிகமாக கன்னியாக்குமரியாகக் கொள்ளப்படலாம்).

56 News 7 tamil, "வள்ளுவர் சிலையின் வரலாறு."



படம்.13: கன்னியாக்குமரி நின்ற நிலை வள்ளுவர் சிலை, 1999. மூலம்: விக்கிப்பீடியா

இச் சிற்பத்தின் உருவவியலை இனி அவதானிப்போம். 133 அடி கற்சிலையில் 38 அடி பீடமும் 95 அடி உருவமுமாக அமைக்கப்பட்டுள்ளது. மூன்று விரல்கள் திருக்குறளின் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்பவற்றைக் குறியீடு செய்வதாகவும் சிலையின் 133 அடி அளவீடு திருக்குறளின் 133 அதிகாரங்களைக் குறியீடு செய்வதாகவும் விளக்கம் கூறப்பட்டுள்ளது. இருக்கும் நிலையில் வள்ளுவர் உருவம் சாத்தியப்பட்ட பின் நிற்கும் நிலை வள்ளுவர் உருவின் அமைப்பும் நிறைவேற்றப்பட்டது. இடுப்புப் பகுதி சற்று வளைவாக வருவதற்கு நடராஜரின் விக்கிரகவியல், பொலனறுவையிலுள்ள பொத்குல் விகாரைச்சிற்பம்(1ம் பராக்கிரமபாகுவின் சிற்பம், புலத்தியர் சிற்பம் என அழைக்கப்படுவது) என்பன உசாவலாகப் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது *(படம். 12).*[57]

பிரம்மாண்டமாக அமைக்கப்பட்ட இச்சிலையின் தோற்றப்பாடும் அது நிலை கொண்டிருக்கும் வெளியும் கூட சிற்பத்திற்கான அர்த்தப்பாட்டை வழங்குகிறது. திராவிடவாதச் செல்வாக்குடையோரின் அனுசரணையில் இருக்கை நிலையில் வரையப்பட்ட ஓவியத்திற்கு அடுத்து நிற்றல் நிலையில் வள்ளுவர் விக்கிரகம் அமைக்கப்பட்டது. தமிழிற்கு அச்சுறுத்தலாகக் கருதப்படுபவற்றை எதிர்க்கும் தொன்மையான போர்வீரன் போன்ற தோற்றப்பாட்டை அவ்விக்கிரகம் கொண்டிருப்பதாக வாசிக்கப்படலாம். வேணுகோபாலின் உருவில் ஓர் ஆரியச்சாயல் இருப்பதாகப் பார்த்தோம் கணபதி ஸ்தபதியின் இச்சிலையில் ஒரு பழம்பெரும் தொல்சீர்தன்மையைப் பார்க்கலாம். இலட்சியார்த்த விக்கிரகமாக சிறப்பாகவே வடிவமைக்கப்பட்டுள்ள இச்சிலை தெளிவான யதார்த்தப்பாணியிலான உருவவியலையும் தொன்மையைக் காட்டும் படியான அரூபவியலையும் கலந்து வழங்குகிறது.

---

57 சோமதிலக, பொலன்னறுவை *பொத்குல் விகாரைச் சிலை.*

தேசியவாதம் என்பது ஆணாதிக்கம் எனும் பார்வையில் நிலைக்குத்தான விக்கிரகமாக உள்ள இச்சிலை ஆணாதிக்கத்திற்குரிய அடையாளமாகக் கூட வாசிக்கப்படலாம்.

திராவிடவாத செயற்றிட்டத்திற்குள் அடங்காத மற்றொரு வாதமாக சைவநிலை வாதிகளின் செயற்றிட்டத்தில் திருவள்ளுவர் பயன்படுத்தப்பட்டு வருவதை சைவநிலைப்படுத்தப்பட்ட ஓவிய உருவவியலிருந்து பார்த்திருப்போம். இச் சைவ வாதத்தின் செயற்றிட்டமாக மயிலாப்பூர் திருவள்ளுவர் கோயிலையும் பார்க்கமுடியும். 16ஆம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் கட்டப்பட்டதாகக் கூறப்படும் இக்கோயிலை சிலர் நினைவாலயமாகவும் சிலர் ஆலயமாகவும் கருதுகின்றனர். 1929 இல் வெளியிடப்பட்ட புத்தகத்தில் வள்ளுவர் கோயில் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நினைவிடத்தை மக்கள் கோயிலாக்கி வழிபாடுகள் செய்கின்றனர். 1970களில் புனருத்தாரணம் செய்யப்பட்டுள்ளது. கோயிலின் இரு சன்னதிகளில் ஒன்றில் பிரதான வள்ளுவர் சிலையும் விமானத்தில் வள்ளுவரிற்கான சுதையும் மற்றொரு சன்னதியில் வாசுகி வள்ளுவரது வெண்கல சிலைகளும் வைக்கப்பட்டுள்ளன.[58] வள்ளுவரை சைவராகக் கோரும் இவற்றில் ஒரு தரப்பு இங்கு சைவ நிலைப்பட்ட சடங்கு விக்கிரகவியற் பயில்வினை மேற்கொள்கிறது.





*படம்.14 (இடது): அடியார் போன்று வணக்கம் செலுத்தும் நிலையிலுள்ள வள்ளுவர், 1970.*
*மூலம்:* tamilnadu.favtourism.blogspot
*படம்.15 (வலது): கோபுரத்தில் வள்ளுவர், 1970. மூலம்:* tamilnadu.favtourism.blogspot

சைவநிலைப்படுத்தப்பட்டு மதம் சார்ந்து பரவலாக்கம் செய்யப்படும் வள்ளுவரை மதசார்பற்ற வள்ளுவர் விக்கிரகமாக சில திராவிடவாதச் செல்வாக்குள்ளவர்கள் உருவாக்கி அதைப் பரவலாக்கம் செய்துள்ளனர். வள்ளுவர் ஏதோவொரு மதத்தைச் சார்ந்தவரா அல்லது மத சார்பற்றவரா என்பது தெளிவில்லாதிருக்கும் சூழலில் திருவள்ளுவரை ஒரு மதத்திற்குரியவராக உரிமை கோரலும் அதை தமது மதம் சார் அரசியலுக்கும் ஏனைய அரசியலுக்கும் பயன்படுத்தல் ஒரு புறம் நிகழ மறுபுறம் வள்ளுவரை மதசார்பற்றவராக முன்வைத்தலும் அவ்வாறு மதசார்பற்றவராக முன் வைத்தல் மூலம் தமக்குரிய உரிமையைக் கோரலும் நிகழ்கிறது. இப்பின்னணியில் 'திருவள்ளுவர் பெருமையைப்' பேசுவதையும் சில குழுக்கள் அவற்றைத் தம்மைப் பிரதிநிதித்துவம் செய்யும்

58 Tamilnadu Tourism, "Thiruvalluvar temple, mailapore, Chennai."

அடையாளங்களை இட்டு உரிமை கோருவதையும், ஏனைய சில குழுக்கள் உரிமை கோருவதை எதிர்ப்புணர்வுடன் எதிர்கொள்ளலையும் விளங்கிக்கொள்ள வேண்டியுள்ளது.

அவற்றில் 1.நவ சைவவாதிகள், சைவ வாதச் செல்வாக்குள்ளவர்கள் வள்ளுவரை தமக்குரிய அடையாளமாக உருவாக்குதல் நிகழ்ந்துள்ளது. 2. தமது கருத்தியலுடன் பொருந்தும் தமிழடையாள விக்கிரகங்களை தி.மு.க உருவாக்கி தமிழ்ப்பரப்பிற்கு போசிப்பாளராக தம்மை முன் வைத்து ஆட்சி அதிகாரத்தைப் பெற்றனர். தமிழ் மொழி சார்ந்து தமிழடையாளத்தைக் கட்டமைப்பதிலும் அதைப் பலவகைகளில் பரவலாக்கம் செய்வதிலும் தொண்டாற்றியுள்ள இவர்கள் வள்ளுவரைத் தமிழடையாளமாக உருவாக்கியதில் அதிகளவிலான பங்கினைப் பெறுவர். 3.இந்துத்துவக் கொள்கையையுடைய பா.ஜ.க கட்சி திருவள்ளுவருக்கு இந்து மத சார் அடையாளங்களை வழங்கி திராவிடக் கட்சிகள் தமிழடையாளமாக்கிய வள்ளுவரைப் பயன்படுத்தி தமிழ் மக்களிடம் தமிழ் உணர்வை வைத்து ஆட்சி அதிகாரத்தைப் பெற முனைவதை தமிழ் நாட்டினை ஆள்வதற்கான தந்திரோபாயங்களாக நோக்கமுடியும்.

**தமிழ் நாட்டிற்கு வெளியில் திருவள்ளுவர்**



*படம்.16: கர்நாடகாவில் தாபிக்கப்பட்ட வள்ளுவர் சிலை, 2009. மூலம்: www.* thenewsminute.com

பங்களூரில் 9.8.2009 அன்று தமிழர் ஆதிக்கப்பகுதியாக இருந்த ஓல்சூர் லேக் பகுதியில் திருவள்ளுவர் சிலை திறந்ததைத் தொடர்ந்து சென்னையில் 13.8.2009 அன்று கன்னடப்புலவர் சர்வஞனா சிலை கன்னட ஆதிக்கம் நிறைந்த இடமான ஜநாவரத்தில் திறக்கப்பட்டது*(படம்.16)*. கர்நாடகாவின் முதலமைச்சராக இருந்த பி.எஸ் யெட்டியூரப்பா வள்ளுவர் சிலை திறப்புவிழாவில் தமிழ்நாடு கர்நாடகா இரண்டு மாநிலங்களுக்கிடையிலான நட்புறவின் சமிக்ஞையாக இச்சிலை திறப்பு அமைவதாகத் தெரிவித்தார்.[59] இவற்றிற்கு முன் கன்னட செயற்பாட்டாளர்கள் சிலை திறப்பிற்குப் கொடும்பாவி எரித்து பெரும் எதிர்ப்பினை வெளிப்படுத்தியிருந்தனர்.

காவேரி நீரினைப் பகிர்வு தொடர்பாக இரு மாநிலங்களிற்கிடையிலும் வேற்றுமை நிலவியதால் 1991 இல் பங்களூரில் தமிழரிற்கெதிரான கலவரம் வெடித்ததிலிருந்து பங்களூரில் வள்ளுவர்

59 One India, "BSY unveils Kannada poet Sarvajna's statue in TN"

சிலை திறப்பு தடுத்து நிறுத்தப்பட்டிருந்தது.[60] ஆட்சி அரசியலில் மாநிலங்களிற்கான நட்பு அரசியலைப் பேணுவதற்கான ஒரு நட்புச்சின்னமாக இச்சிலை இங்கு அர்த்தம் கொள்ளப்படலாம். தமிழ் பேசுவோருடன் வெறுப்புள்ளோர்க்கு அது விரோதமான அர்த்தத்தைக் கூட வழங்கும்.

**இலங்கையில் திருவள்ளுவர்**

இலங்கையில் திருவள்ளுவரை அனேகமாக சைவநிலைப்பட்டவராகப் பார்க்கின்றனர். இங்கும் வள்ளுவரை ஓர் அரசியலற்ற உருவமாகப் பார்க்க முடியாது. ஈழத்தவரான சைமன் காசிச்செட்டியால் எழுதப்பட்ட தமிழ் புலவர்களின் வரலாறு கூறும் முதலாவது நூலாகக் கருதப்படும் தமிழ் புளுட்டாக்கில் (1859) திருவள்ளுவரும் உள்ளடக்கப்பட்டுள்ளார். ஈழத்தில் திருக்குறள் வட்டுக்கோட்டை மிசனறியின் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தது என்பதுடன் வள்ளுவர் பற்றிய பயில்வுகளையும் இனங்காண முடிகிறது.

ஆரம்பத்தில் சைவசமயப் பாடப்புத்தகங்களில் திருக்குறள் உள்ளடக்கப்பட்டிருந்தது. பின்னர் தான் தமிழ்ப் புத்தகங்களில் கொண்டுவந்தனர். தமிழாராட்சி மாநாட்டுக் காலப்பகுதியில் தமிழக அரசால் வள்ளுவர் உரு பரவலாக்கம் செய்யப்பட்ட பின்னரே வள்ளுவர் உருக்களைப் பரவலாக்கல் ஈழத்திலும் நிகழ்ந்தது. தமிழாராட்சி மாநாட்டுக் காலப்பகுதியில் தமிழக அரசால் வள்ளுவர் உரு பரவலாக்கம் செய்யப்பட்ட பின்னரே வள்ளுவர் உருக்களைப் பரவலாக்கல் ஈழத்திலும் நிகழ்ந்தது. நான்காவது உலகத் தமிழாராட்சி மாநாடு 1974இல் இலங்கையில் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த போது தமிழ் அடையாளச் சிலைகளை வைத்தலும் நிகழ்ந்தது. தமிழடையாளத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிலைகளாக ஈழத்தைச் சேர்ந்தோரின் சிலைகள் உட்பட வள்ளுவர் சிலையும் வைக்கப்பட்டுள்ளது. இலங்கைக் காவல்துறையினரால் மேற்கொள்ளப்பட்ட தமிழாராட்சி மாநாட்டுப் படுகொலை தமிழ்த் தேசிய சிந்தனையைத் தீவிரப்படுத்திய காரணியாகவும் பார்க்கப்படுகிறது. தமிழடையாளப் போக்கின் வெளிப்பாடும் அதை எதிர்க்கும் தரப்பின் நிலைப்பாடும் இலங்கையின் இனப்பிரச்சனை. போர் என இழுத்துச் சென்றுள்ளமைக்கான காரணங்களில் ஒன்றாகக் கூறமுடியும்.

ஈழத்தில் திருவள்ளுவர் உருவம் உள்வாங்கப்பட்ட முறையை அடுத்து கவனிக்கலாம். 1."சைவமும் தமிழும்" தமிழ் மொழி அரசியலில் முன்வருகையில் வள்ளுவர் உருவம் சைவ நிலைப்படுத்தப்பட்டு வரல் நிகழ்கிறது. 2.பாடசாலைப் பாடத்திட்டத்தில் திருக்குறள், திருவள்ளுவரை தமிழ் நிலைப்படுத்தப்பட்டவையாகக் கொண்டுவரல். காலனியத்திற்குப் பின்னர் நவீன சமூக உருவாக்கத்தில் தமிழகப் பகுதியில் மட்டுமன்றி ஈழத்திலும் திருவள்ளுவரை முற்போக்கான வடிவமாகக் கருதத்தொடங்கினர். யாழ்ப்பாண நகரில் மில்க் வைற் கனகராஜாவால் வள்ளுவர் உட்பட்ட தமிழ் அடையாளத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் சிலைகள் வைக்கப்பட்டன.[61]

தென்னிந்தியாவுடனான தமிழ் அடையாள உறவைப் பேணும் வகையில் அங்கிருந்து 16 வள்ளுவர் சிலைகள் 2016 ஆடி மாதம் சர்வதேச தமிழ் சங்கத்தால் அன்பளிப்பு செய்யப்பட்டன *(படம்.17)*. மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, சாவகச்சேரி, புத்தளம், கொழும்பு, மாத்தளை, ஹட்டன், நாவலப்பிட்டிய, ரக்வான, கட்டைபறிச்சான், மட்டக்களப்பு, தம்பிலுவில் போன்ற

60 Press Trust of India, "Thiruvalluvar's statue unveiled in Bangalore"
61 "மில்க் வைற் அதிபர் கனகராசா"

இடங்களில் தாபனம் செய்யப்பட்டன *(படம்.18).*[62] இவ்வாறு கொண்டுவரப்பட்ட உருக்கள் தி.மு.க வினால் அதிகாரபூர்வமாக்கப்பட்ட வள்ளுவர் உருவின் நகல்கள் தான் ஆனால் அவை "தமிழ் வீரம்" எனும் எண்ணக்கருப்படி ரௌத்திரமுடைய விக்கிரகவியலைக் கொண்டுள்ளதாகப்படுகிறது



*படம்.17: அன்பளிப்புச் செய்யப்பட்ட சிலைகள், 2016.*
*மூலம்:* www.omlanka.net

தமிழ் பேசுவோர் வாழும் பகுதிகளை அடையாளப்படுத்துவதாகவும் சிங்கள- தமிழ் முரண்பாட்டில் சிங்களவரை அச்சுறுத்தும் அடையாளமாகவும் இத் திருவள்ளுவர் தாபிப்பு அர்த்தம் கொள்ளப்படலாம்.

இலங்கையில் திருக்குறள் மாநாடு நிகழ்த்தப்படலும் அங்கு வைக்கப்படும் வள்ளுவர் உருக்களும், இலங்கையின் வெவ்வேறு பகுதிகளிலும் நிறுவப்படும், உற்பத்தி செய்யப்படும் வள்ளுவர் உருவங்களும் கூட ஆய்விற்கு உட்படுத்த வேண்டியவை.




*படம்.18: ஹற்றன் ஆரம்ப பாடசாலையில் ஒன்றில் வள்ளுவர் சிலை தாபிப்பிற்கான ஊர்வலம்.*
*மூலம்:* www.omlanka.net

## திருவள்ளுவர் ஓர் அரசியல் செயற்றிட்டம்

தமிழர் சிற்ப உருவவியலில் சிற்ப சாஸ்திர நூல்களில் கூறப்பட்ட உருக்களின் விக்கிரகவியலிற்கு ஏற்பவே அவ் உருவம் அமைக்கப்படும். வள்ளுவருக்கான உருவவியல் எங்குமே குறிப்பிடப்படவில்லை. ஏனெனில் வள்ளுவர் நவீன காலத்தின் மீள் கண்டுபிடிக்கப்பட்ட மரபிலிருந்து வரும் விக்கிரகம். தேசிய வாதக் கருத்தியல் பின்னணியில் தான் வள்ளுவரிற்கான விக்கிரகம் உருவாக்கும் படியான வாய்ப்பு ஏற்பட்டது. அதன் படி அவரிற்கான உருவத்தில் பன்மையான கருத்தாடல்களின் தாக்கம் உள்ளது.

62 Ramakrishnan, "16 Thiruvalluvar statues to be put up in Sri Lanka."

சமூகமானது ஒருபோதும் குறியியலிற்கு வெளியிலில்லை. ஒவ்வொரு சமூகப்பயில்வும் அர்த்தத்திற்கும் பிரதிநிதித்துவத்திற்குமிடையிலான உள் விளையாட்டாகக் கட்டமைக்கப்பட்டிருக்கும். அது அவ்வாறாகவே பிரதிநிதித்துவமும் செய்யப்படும். வேறு வார்த்தையில் கூறினால் கருத்தியலிற்கு வெளியில் எந்த சமூகப்பயில்வும் கிடையாது. சகல சமூகப்பயில்வும் கருத்தாடலிற்கு இடையில்த்தான் நிகழ்கிறது. சமூகப்பயில்வு என்பது கூட இல்லை அவை கருத்தாடல்களாகும். எல்லாப்பயில்வுகளுமே கருத்தாடல்களன்றி வேறொன்றுமல்ல.[63] அதனால்த்தான் வள்ளுவர் உருவின் குறிகள்(signs) ஒவ்வொன்றும பார்க்கப்பட வேண்டியவை. கருத்தியல்கள் தான் பிரதிநிதித்துவத்தைத் தீரமானிப்பவை ஆதலால் வள்ளுவர் உருவை உற்பத்தி செய்யும் பயன்படுத்தும் ஒவ்வொரு தரப்பின் கருத்தாடல்களையும் கண்டறிய வேண்டியுள்ளது. அதன் படிதான் பன்மைத்துவமாகவுள்ள வள்ளுவர் உருவங்களின் அர்த்தப்பாட்டைப் புரிந்துகொள்ள முடியும்.

ஓவியம், சிற்பம் மற்றும் ஏனைய காண்பிய வடிவங்கள் மூலம் வள்ளுவரை உற்பத்தி செய்பவர்கள் ஒவ்வொருவரும் ஒன்றுக்கொன்று வேறுபட்ட கருத்தியல்களை வெளிப்படுத்துபவர்களாகின்றனர். இதையே அண்டர்சன் பின்வருமாறு கூறுகிறார். "ஊடகங்களில் வேலை செய்பவர்கள் உற்பத்தி செய்கின்றனர், மீள் உற்பத்தி செய்கின்றனர். கருத்தியல் பிரதிநிதித்துவத்தின் களத்தை நிலைமாற்றம் செய்கின்றனர். இவர்கள் பொருட்பண்ட உலகத்தை மீள் உற்பத்தி செய்து, உற்பத்தி செய்பவர்களிலிருந்து வேறுபட்டு கருத்தியலுடன் வேறுபட்ட உறவினைக் கொண்டவர்களாகின்றனர்."[64] இந்த உற்பத்தியாளர்களை வள்ளுவர் உருவை உற்பத்தி செய்யும் சக்திகளாக இங்கே இனங்காணலாம்.

திருவள்ளுவரை ஒரு அரசியற்செயற்றிட்டமாக முன்வைப்பதற்கான பிரதான காரணங்கள்: தேர்தல் அரசியலுக்காகப் பயன்படுத்தப்படல், தமிழ் அடையாளத்தை உருவாக்கல், தமிழ் அடையாளமாகப் பயன்படுத்துதல், தமிழ் தேச உருவாக்கத்திற்காகப் பயன்படுத்துதல் இவற்றில் ஊடக உற்பத்தி வலிமை பெற்ற தரப்புகள் தமது அரசியல் செயற்றிட்டத்தின் பொருட்டு தமிழ் அடையாளத்தினை உரிமை கோரி தமிழ் மக்களின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கான வேலைத்திட்டமாக இவற்றைச் செய்கின்றனர். அதே வேளை திருவள்ளுவர் உருக்கள் ஆதிக்கத்திற்கு எதிரான எதிர்ப்பு வடிவங்களாகவும் பார்க்கப்படக்கூடியவை. ஆரம்ப சைவ நிலைப்படுத்தப்பட்ட வள்ளுவர் உருக்கள் காலனியத்திற்கு எதிரான எதிர்ப்பு வடிவங்களாக சைவமும் தமிழும் என்பதை முன்வைத்தவையாகப் பார்க்க இயலும், தமிழர் பின்பற்றும் ஏனைய மதங்களை சேர்த்துக் கொள்ளாதவையாகவும் இவை பார்க்கத்தக்கவை. அடுத்து திராவிடக்கருத்தியலின் தாக்கம் கொண்டவர்கள், இந்து மதசார் தேசியவாதத்திற்கான எதிர்ப்பு வடிவங்களாக வள்ளுவரை அதிகபட்சம் மத நீக்கம் செய்ய முயன்றவர்கள். இவ்விரு தரப்பினையும் வள்ளுவரை எதிர்ப்பு வடிவங்களாகப் பயன்படுத்தியதாக வாசிக்கலாம் என நினைக்கிறேன்.

பிரதிநிதித்துவத்தின் அமைப்புகள் பற்றிய முக்கிய விடயம் அவை ஒருமையானவை அல்ல. எந்தவொரு சமூக உருவாக்கத்திலும் பல அமைப்புகள் இருக்கும், அவை பன்மையானவை. கருத்தியல்கள் ஒற்றை எண்ணக்கருத்துகளூடாக இயங்குவதில்லை. அவை கருத்தாடற் சங்கிலிகளில், குவியல்களில், குறியியற்களங்களில், கருத்தாடல் உருவாக்கங்களில் இயங்கும்.[65]

63 Hall, "Signification,representation, ideology: Althuser and post structuralist debates", 103.
64 Anderson, *Long Distance Nationalism: World Capitalism and the Rise of Identity Politics.*
65 Hall, "Signification,representation, ideology: Althuser and post structuralist debates", 104.

அவ்வாறு ஒவ்வொரு தரப்பும் தமது கருத்து நிலை கொள்கைகளுக்கேற்ப வள்ளுவர் உருவவியலை உருவாக்குவதையும் காணமுடிந்தது. சாதாரண மக்களோ தாம் ஏற்றுக்கொண்ட கருத்தியலுக்கேற்ப வள்ளுவரை உள்வாங்கிக் கொள்வர்.

**நன்றிகள் :**

இக்கட்டுரைக்கான பின்னூட்டல்களை வழங்குவதில் பல வழிகளிலும் உதவியாக இருந்த கலாநிதி தா.சனாதனன், எஸ்.சத்தியதேவன், அருண்மொழி வர்மன் போன்றோரிற்கு மனமார்ந்த நன்றிகள்.

**உசாத்துணை**

Anderson, B., *Long Distance Nationalism: World Capitalism and the Rise of Identity Politics*. Amsterdam: CASA, 1992.

Arignaranna.net, "சிறப்புக்கட்டுரை: அறிஞர் அண்ணா", accessed on 6.12.2019. http://www.arignaranna.net/thiruvalluvar.html.

Breuilly, John., "Benedict Anderson's imagined communities: a symposium." in *Nations and Nationalism*, 2016, accessed on 30.11.2019. http://eprints.lse.ac.uk/67407/1/Imagined%20communities_2016.pdf.

Hall, Stuart., "Signification,representation, ideology: Althuser and post structuralist debates" in *critical studies in mass communication*.Vol 2 (June 1985):91-114, accessed on 6.12.2019. https://pages.mtu.edu/~jdslack/readings/CSReadings/Hall_Signification_Representation_Ideology.pdf.

One India, "BSY unveils Kannada poet Sarvajna's statue in TN", accessed on 6.12.2019. https://www.oneindia.com/2009/08/13/sarvajna-statue-unveiled-in-chennai-bs-yeddyurappa.html.

Martínez Alfaro, María Jesús., "Intertextuality: origins and development of the concept" in *Atlantis*, Vol. XVIII (No. 1/2), 1996, accessed on 14.6.2020. https://www.jstor.org/stable/41054827?seq=1.

New Indian-Chennai News + more, "திருவள்ளுவர், தொல்காப்பியர் சிலையும் சிதைக்கப்படும் தமிழர் மரபு" 30.8.2019, accessed on 6.12.2019. https://newindian.activeboard.com/t65849404/topic-65849404/?fbclid=IwAR1rBM_DJML8moSoJrer-uB5n3ETKuiFhyGlQsQE1VSrJ3onaMQuNYfXJpU.

News 7 tamil, "வள்ளுவர் சிலையின் வரலாறு" 17.3.2018, accesed on 04.11.2019. https://www.youtube.com/watch?v=ONkWiLRDCxo.

Prayer Elmo Raj, P., "Text/Texts interrogating Julia kristeva's concepts of intertexuality" in *Ars Artium*: Vol. 3 (January 2015): 77-80, accessed on 6.12.2019. https://arsartium.org/wp-content/uploads/2018/09/14.-TextTexts-Interrogating-Julia-Kristevas-Concept-of-Intertextuality-by-P.-Prayer-Elmo-Raj.pdf.

Press Trust of India, "Thiruvalluvar's statue unveiled in Bangalore" in Business Standard, last upadated at 20.1.2013. accesed on 06.08.2019. https://www.business-standard.com/article/economy-policy/thiruvalluvar-s-statue-unveiled-in-bangalore-109081000076_1.html.

ஓவியம்,சிற்பம் மற்றும் ஏனைய காண்பிய வடிவங்கள் மூலம் வள்ளுவரை உற்பத்தி செய்பவர்கள் ஒவ்வொருவரும் ஒன்றுக்கொன்று வேறுபட்ட கருத்தியல்களை வெளிப்படுத்துபவர்களாகின்றனர். இதையே அண்டர்சன் பின்வருமாறு கூறுகிறார்: Ramakrishnan,T., "16 Thiruvalluvar statues to be put up in Sri Lanka" 26.7.2016, accessed on 9.12.2019. https://www.thehindu.com/news/national/tamil-nadu/16-Thiruvalluvar-statues-to-be-put-up-in-Sri-Lanka/article14509257.ece

Thirukkural of Thiruvalluvar, "An introduction to Kural & its author"11.1.2013, accessed on 01.01. 2020. http://kural-of-valluvar.blogspot.com/2013/01/an-introduction-to-kural-its-author.html.

Times of India, " Tarun Vijay's book on thiruvalluvar by Smiti Irani"7.1.2015, accesed on 04.11.2019. https://timesofindia.indiatimes.com/india/Tarun-Vijays-book-on-Thiruvalluvar-released-by-Smiti-Irani/articleshow/45796083.cms.

TNM staff, "Thiruvalluvar in orange robes: DMK and CPI(M) slam BJP for 'saffronising' legendary poet", accessed on 6.12.2019. https://www.thenewsminute.com/article/thiruvalluvar-orange-robes-dmk-and-cpim-slam-bjp-saffronising-legendary-poet-111672.

Sanjeevee, Sadagopan., "Thiruvalluvar Controversy Rages On Between Right, Left In Tamil Nadu", accessed on 6.12.2019. https://www.republicworld.com/india-news/general-news/thiruvalluvar-controversy-rages-on-between-right-left-in-tamil-nadu.html.

"Thirukkural of Thiruvalluvar" 11.1.2013, accessed on 6.12.2019. http://kural-of-valluvar.blogspot.com/2013/01/an-introduction-to-kural-its-author.html.

Tamilnadu Tourism, "Thiruvalluvar temple, mailapore, Chennai" 2017, accessed on 12.12.2019. https://tamilnadu-favtourism.blogspot.com/2017/12/thiruvalluvar-temple-mylapore-chennai.html.

Upadhyay, Kavita.," Thiruvalluvar finds no welcome in Haridwar" 18.7.2016, accesed on 01.11.20919. https://www.thehindu.com/news/national/other-states/Thiruvalluvar-finds-no-welcome-in-Haridwar/article14495916.ece.

Viator, "Valluvar Kottam Tours and Activities" accessed on 04.03. 2019. https://www.viator.com/Chennai-attractions/Valluvar-Kottam/d4624-a7380?sortType=featured.

Zvelabil, Kamil.,"Companion studies to the history of tamil literature", Handbush Der Orientaistik series, Brill Academic Publishers, 1992.

ஆதனூர்சோழன், "கலைஞரின் அய்யன் திருவள்ளுவர்", 31.7.2018, https://www.nakkheeran.in/special-articles/special-article/kalaingar-thiruvalluvar-statue-kanyakumari.

சிவத்தம்பி,கா., *பண்டைய தமிழ் சமூகத்தில் நாடகம்*, கொழும்பு: குமரன் புத்தக இல்லம்,2004.

சோமதிலக, மகிந்த., *பொலன்னறுவை பொத்குல் விகாரை சிலை.* கொழும்பு: எஸ் கொடகே சகோதரர்கள் பிறைவேட் லிமிட்டேட், 2014.

திருவேணிசங்கமம், சா., க.இரகுபரன், *சைமன் காசிச்செட்டியின் தமிழ் புளுடாக், தமிழ் நூல் விபரப்பட்டியல்*, கொழும்பு: இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்,2017.

மகாதேவன், ஐராவாதம்., "திருவள்ளுவரின் திருமேனி தாங்கிய தங்கக்காசு-2" இதழ் -36, 2007, http://www.varalaaru.com/design/article.aspx?ArticleID=539&fbclid=IwAR2NjdB8KHgih7A9hCICBnPudFneGllWFbrGWi6qqO-nZIcLLkAgKjr6D0Q

மணிகண்டன்., "வள்ளுவர் மகானா மகாகவியா பாரதியின் மதிப்பீடு", 11.12.2018, accesed on 11.11.2019. https://www.hindutamil.in/news/opinion/columns/148268--2.html.

"மில்க் வைற் அதிபர் க.கனகராசா", மகாஜனா விடுதி மாணவர் மன்றம்,1978.

முத்துக்குமார், ஆர்., "வள்ளுவர் வரலாற்றைத் திரித்ததா திராவிட இயக்கம்."14/11/2019 at 3:25PM, accessed on 6.12.2019. https://tamil.asiavillenews.com/article/dravidian-movement-and-valluvam-a-retrospect-part-2-20686.

முரளிதரன், காசி விஸ்வநாதன்., "திருவள்ளுவர் உருவம் உருவானது எப்படி இதுவரை எத்தனை உருவங்களில் அவர் வரையப்பட்டுள்ளார்" 6.12.2019, accessed on 11.11.2019. https://www.bbc.com/tamil/india-50312020.

வீரகுமார், "தாய் மொழியில் திருக்குறள் மொழிபெயர்ப்பை வெளியிட்ட மோடி..தாய்லாந்தில் கோலாகலம்" 2.11.2019, accesed on 04.11.2020. https://tamil.oneindia.com/news/international/pm-narendra-modi-releases-a-thai-translation-of-thirukkural-367291.html.

ஜெபநேசன்,எஸ்., *இலங்கைத் தமிழர் சிந்தனை வளர்ச்சியில் அமெரிக்க மி'னரி*. குமரன் புத்தக இல்லம்,2009.

ஸ்ரீராம் சர்மா., "சிறப்புக்கட்டுரை: மழித்தலும் நீட்டலும்.", accessed on 6.12.2019. https://minnambalam.com/k/2018/01/06/14.

ஸ்ரீராம் சர்மா., "சிறப்புக்கட்டுரை2", accessed on 6.12.2019. https://minnambalam.com/k/2018/01/15/17.